பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா.7.00

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | தை 18 | ஞாயிற்றுக்கிழமை | (01-02-2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 44

துரித தபால்.பொதிகள் சேவை
உள்ளூர் வெளிநாடுகளுக்கான
சகல தபால்;பார்சல்கள் எதுவானாலும்
உடனுக்குடன் அனுப்புவதற்கு
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
Computer Systems
303, K.K.S. ROAD, JAFFNA
T.P : 021-222 2670
FAX: 222 3214
Email-del-smskr@eureka.lk

## பிரதமர் ரணில் கேட்கும்
# முப்படை மீதான அதிகாரத்தை
# கையளிக்க ஜனாதிபதி மறுப்பு!

(கொழும்பு)

**ஜனாதிபதியிடம் பாதுகாப்பு அமைச்சிருக்க, இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படை ஆகியவற்றின் மீது சில வகையான அதிகாரங்களை தாம் வைத்திருப்பதென்ற பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் கோரிக்கையை ஜனாதிபதி ஏற்றுக் கொள்ளமாட்டாரென தெரியவருகிறது.**

மேற்படி கோரிக்கை அடங்கிய தீர்மானத்தை ஐக்கிய தேசிய முன்னணியினர், மனோதித்தவெல-மாலிக் சமரவிக்கிரம குழுவிடம் கையளித்திருந்தனர்.

மேலும் பாதுகாப்பு அமைச்சுத் தொடர்பாக அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வதற்கு தாம் இன்னமும் தயாராக இருப்பதாகவும் ஆனால் ஜனாதிபதியிடமிருந்து இதற்கான பதில் இன்னமும் கிடைக்கவில்லை எனவும் ஐ.தே.முன்னணியினர் தெரிவித்துள்ளனர்.

இந் நிலையிலேயே ஜனாதிபதி மேற்படி கோரிக்கையை ஏற்றுக் கொள்ளமாட்டரென்று ஜனாதிபதிக்கு நெருக்கமான வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

இதேவேளை மேற்படி கோரிக்கை அரசியலமைப்பு ரீதியாக ஜனாதிபதியின் அந்தஸ்தைக் குறைக்கும் என்று தெரிவித் உயர் நீதித்துறை அதிகாரி, ஜனாதிபதி முப்படைகளின் தளபதி என்பதை அரசியல் அமைப்பு தெளிவாகக் கூறியுள்ளது என்றார்.

(12ம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் பீரிஸின் செயலாளர்
## தலைமையிலான குழு யாழ்.வருகை
### சமாதான முயற்சி குறித்து ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டிற்கு நேற்று வருகை தந்த அரசியல் விவகார அமைச்சர் பேராசிரியர் பீரிஸின் பிரத்தியேகச் செயலாளர் ஸ்ரீலால் லக்திலக தலைமையிலான குழுவினர், தடைப்பட்டுப்போயுள்ள சமாதான முயற்சிகளை எவ்வாறு தொடர்ந்தும் முன்னெடுப்பது என்பது குறித்து கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

நாவலர் கலாசார மண்டபத்தில் இக் கலந்துரையாடலில் பட்டப் பின் படிப்புக்கள் பீடாதிபதி சி.க.சிற்றம்பலம், மகளிர் அபிவிருத்தி மன்றப் பணிப்பாளர் திருமதி சறோஜினி சிவச்

(12ம் பக்கம் பார்க்க)

## இலங்கை - இந்திய பாதுகாப்பு
## உடன்படிக்கை பிற்போடப்பட்டது

(கொழும்பு)

இலங்கை இந்தியப் பாதுகாப்பு உடன்படிக்கை கைச்சாத்திடுவது தற்காலிகமாக பிற்போடப்பட்டுள்ளது.

இந்தியப் பாராளுமன்றம் எதிர்வரும் 6ம் திகதி கலைக்கப்படவிருப்பதாலும், விரைவில் பொதுத் தேர்தல் ஒன்று நடைபெறவிருப்பதாலுமே இப் பாதுகாப்பு உடன்படிக்கை கைச்சாததிடுவது உடனடியாகச் சாத்தியமாகவில்லை என்று கொழும்பில் உள்ள இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்தியாவுடனான பாதுகாப்பு உடன்படிக்கை இலங்கை ஜனாதிபதிக்கும் பிரதமருக்குமிடையிலான அரசியல் ரீதியான ஆதரவுக்காக அவர்களால் திட்டமிடப்பட்டதாகவும் மேலும் இதனால் விரும்பத்தகாத அரசியல் விளைவுகள் ஏற்படுவதை இந்திய அரசு விரும்பவில்லை எனவும் புதுடில்லி வட்டாரங்கள்

(12ம் பக்கம் பார்க்க)

## எமது பலத்தை வெளிக்காட்டவே
## அம்பாறையில் போட்டியிடுகிறோம்
### அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு

(நமது நிருபர்)


தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் அரசியல் பலத்தை எடுத்துக் காட்டுவதற்காக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் போட்டியிடுவதாக முஸ்லிம் காங்கிரசின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

கல்முனை மாநகரசபைத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் மத்தியில் உரையாற்றும் போதே மேற்கண்டவாறு அமைச்சர் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

கல்முனையில் நேற்று நடை

(12ம் பக்கம் பார்க்க)

### குறிக்கோளுடன் செயற்படும் மனிதர்
## தலைவர் பிரபாகரனுக்கு
## பொலிஸ்மா அதிபர் புகழாரம்



(கொழும்பு)

இலங்கைப் பொலிஸார் குறிக்கோளுடன் செயற்பட வேண்டும் என்பதற்கு, தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் சிறந்த உதாரண புருஷர். இவ்வாறு பொலிஸ்மா அதிபர் இந்திராடி சில்வா புகழாரம் சூட்டியுள்ளார்.

ஊவா மாகாண சபைத் தொகுதியில் நடைபெற்ற பொலிஸாருக்கான அறிவுறுத்தல் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே பொலிஸ்மா அதிபர் இவ்வாறு தலைவர் பிரபாகரனை உதாரணம் காட்டியுள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில், எத்தகைய பிரச்சினைகள், இடையூறுகள் ஏற்பட்டாலும் விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் வே. பிரபாகரன் தன் இலட்சியத்தைக் கைவிடவில்லை.

அத்துடன் மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்க கூடிய வகையில் செயற்பட்டு வந்த பெருமையும் பிரபாகரனுக்கே கிடைத்திருக்கிறது.

இலங்கைப் பொலிஸாரின் பணிகள் தற்போது திருப்திகரமானதாக இல்லை. மக்களுடன் நல்லுறவைப் பேணி அவர்களின் நம்பிக்கையைப் பெறவேண்டும் என்ற எண்ணம்

(12ம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பி.யுடன் ஈ.பி.டி.பி சந்திப்பு

(கொழும்பு)

ஜே.வி.பிக்கும், ஈ.பி.டி.பியினருக்குமிடையே நேற்று மாலை சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

சுமார் ஒன்றரை மணிநேரம் நடைபெற்ற இச் சந்திப்பின் போது தற்போதைய அரசியல் நிலைவரம் தொடர்பாகவும், கூட்டு அரசாங்கம் உருவாக்கப்பட்ட பின்னர் வடக்குக் கிழக்கு மாகாணத்தில் ஜனநாயகத்தை நிலை நாட்ட வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொண்டு அதனை உறுதிப்படுத்த வேண்டுமென்று ஈ.பி.டி.பி குழுவினர் கேட்டுக் கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச் சந்திப்பில் மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) சார்பில் அதன் தலைவர் சோமவன்ச அமரசிங்க, ரிஸ்வின் சில்வா ஆகியோரும், ஈ.பி.டி.பி சார்பில் அதன் செயலாளரும் யாழ்.மாவட்ட எம்.பியுமான டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான குழுவும் கலந்து கொண்டன.

(ம)


## காரைநகர் வாரிவளவில்
## இன்று மகாகும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் வாரிவளவு ஸ்ரீகற்பக விநாயகர் ஆலய மகாகும்பாபிஷேகம் இன்று காலை 7.44 மணி முதல் 9.04மணிவரையுள்ள சுப நேரத்தில் நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேக பிரதிஷ்டா பிரதம குரு சிவஸ்ரீ வை.மு.பரமசாமிக் குருக்கள் தலைமையில் கிரியை

(12ம் பக்கம் பார்க்க)



படம்: காரைநகர்ச் செய்தியாளர் ப.ஐங்கரன்

**உள்ளே சிறப்புமலர் நான்கு வர்ணங்களில்**

பெரும் இசைக்கச்சேரி

காரைநகர் வாரிவளவு ஸ்ரீகற்பக விநாயகர் தேவஸ்தானம்
மகா கும்பாபிஷேக தினமாகிய இன்று (01.02.2004) ஞாயிற்றுக்கிழமை இரவு 8.00 மணிமுதல்
இசைச் சக்கரவர்த்தி, இசைத்தென்றல், கலைமாமணி டாக்டர் T.M. சௌந்தரராஜன் அவர்களின்
மூத்த புதல்வர், இசைக்கலாமணி திரு.T.M.S.பால்ராஜ் அவர்களின்
(தந்தையின் குரல் வளத்தில்)
இசைக் கச்சேரி தேவஸ்தான முன்றலில் நடைபெறும்.
அணிசேர் கலைஞர்கள் அருணா இசைக் குழுவினர்
அனைவரும் வருக! இசையமுதம் பெறுக!! ஸ்ரீகற்பக விநாயகர் கருணை பெறுக!!!



T.M. சௌந்தரராஜன்

ஸ்ரீகற்பக விநாயகர் தேவஸ்தானம் வாரிவளவு, காரைநகர்.

இவ்வண்ணம் தேவஸ்தான நிர்வாகசத்தர்.



T.M.S. பால்ராஜ்

## இன்று ஒரு தகவல்

# கைகட்டும் பழக்கம்!

நாம் ஒருவர் முன் நின்று பேசிக்கொணடு இருக்கின்றோம் என்று வையுங்கள்! கொஞ்சநேரம் அவர் இயல்பாக நின்றுகேட்டுக்கொண்டிருக்கிறார். அதன் பின் மொதுவாக கைகளைக்கட்டிக்கொண்டு கேட்க ஆரம்பிக்கின்றாரென்றால் அவர் நமது பேச்சை மரியாதையாகக் கேட்கிறார் என்று நினைத்துவிடக் கூடாது. மரியாதையாக நாம் பேசுவதை நிறுத்தச் சொல்கின்றார் என்று அர்த்தம்.

அந்த உடல் மொழியைப் புரிந்து கொள்ளாது நாம் பாட்டுக்குப் பேசிக்கொண்டிருந்தோம் என்றால் அவ ருக்கு நம்மீது ஒரு வெறுப்பு வந்து விடும். நம்முன் இருப்பவரின் கைக்கட்டை அவிழ்க்கச் சில தந்திரங் கள் உள்ளன. பேச்சுக்கு மத்தியில் அவரிடம் ஒரு பேனாவைக் கொடுங்கள் அல்லது ஒரு புத்தகத்தைக் கொடுங்கள் அவர் கைபிரியும். மறுபடியும் உங்கள் பேச்சை அவர் கவனமாகக் கேட்பார். மறுப்புச் சிந்தனை நீங்கி ஏற்புச்சிந்தனை வரும்.

ஒருவர் பலமாகக் கையைக் கட்டிக்கொண்டு நிற்கிறார் என்றால் அவரது மனதில் என்ன நினைப்பு உள்ளது தெரியுமா? நான் தனி...சேரவிரும்பவில்லை... எனக்கு இந்தச் சூழல் இயல்பாக இல்லை. இது போன்ற மறுப்பு எண்ணத்தின் ஒட்டுமொத்தத் தொகுப் புத்தான் கை கட்டுவது! மனோதத்துவ நிபுணர்கள் அப்படித்தான் கூறுகின்றனர். இரண்டு கைகளையும் கட்டும்போது எதிலிருந்தோ தப்பிப்பதற்கு ஒரு பாது காப்பு கிடைப்பதுபோல ஒரு உணர்வு கிடைக்கின்றது. நமது கை கள் நமது உடம்புக்கு முன்பாக இருப்பத னால் ஒரு தற்காப்பு அல்லது கவசம் மாதிரி.

இந்தப் பழக்கம் நமக்கு எப்படி ஆரம்பிக்கின்றது தெரியுமா? சிறுவயதில் ஏதாவது தவறு செய்துவிட்டு அம்மாவுக்குப் பின்னால் போய் ஒளிந்து கொள்வது. ஒரு கதவுக்குப் பின்னால் போய் ஒளிந்து கொள்வது போன்ற பழக்கங்கள் நாம் வளர்ந்த பின்பு நம்மை மறைப்பதற்கு முன்னால் எதுவும் இல்லை. அதனால் கையை முன்னால் கொண்டு வந்து கட்டிக் கொள்கி றோம். கையையே ஒரு மறைவாக உபயோகப்படுத்து கின்றோம் அவ்வளவுதான்!

அதனால் இப்போதும் ஒரு கும்பலில் நாம் கை கைக் கட்டிக்கொண்டிருந்தோமென்றால் நாம் ஒரு பெரிய பாதுகாப்பிற்குள் இருப்பதாக நமது உள்மனது நினைத் துக் கொள்ளும். அச்சுறுத்தும் சம்பவங்கள் பதற்றம் பலர் முன் நிற்க வேண்டிய சூழ்நிலை மேடை போன்ற உங்களில் நமது கைகளை மார்பில் கட்டிக்கொண் டால் மனதிற்கு ஓர் நிம்மதி! பிடிக்காத இடம், பிடிக்கா தவர் மத்தியில் நிற்கவேண்டிய சந்தர்ப்பம், பிடிக்காத சூழ்நிலை போன்ற நேரங்களில் முன்கை கட்டுவது ஒரு வழக்கமான அறிகுறி. நான் அப்படி இல்லையே என்று நமக்குத் தோன்றினாலும் நமது உள்மனம் அப்படித்தான் நினைக்கின்றதாம்.

ஒரு மேலதிகாரி அல்லது தன்னை மேலானவராக நினைக்கும் ஒருவர் ஒரு பணியாளரைப் பார்க்கின்ற போது முன்கையைக் கட்டமாட்டார். பின்புறம் கோர்த் துக் கொண்டு நிமிர்ந்து நிற்பார்.அவரது மார்புக்குப் பாது காப்புத் தேவைப்படவில்லை. கைகளை சட்டைப் பையில் கூட விட்டுக் கொள்வார். மிகவும் தைரியமாக இருப்பதாக அவர் காட்டிக் கொள்வார்.

ஒரு காவல்துறை அதிகாரி இடுப்பில் துப்பாக்கி வைத்திருக்கிறார். அவர் கைகட்ட மாட்டார் ஏனென்றால் துப்பாக்கி இருக்கின்றது என்ற நினைப்பு மனதில் தைரியத்தைக் கொடுக்கின்றது. ஒரு நிபுணர் ஒருகூட்டத்தில் பேசுகின்றார். வேண்டுமென்றே அவரது உணர்வைப் பாதிப்பது போலப் பேசுகிறார். மிகவும் கடுமையாக அவர் பேசப்பேச 90 சதவீதம் பேர் கையைக் கட்டிக் கொண்டிருந்தனராம். சும்மா விளையாட்டுக்காகக் கதைத்தேன் என்று கூறியதும் சிரித்துக் கொண்டே எல்லோரும் கையை எடுத்துவிட்டார்களாம்.

நமது மனம் என்ன நினைக்கின்றதென்பதை நமக்குத் தெரியாமல் நமது உடல் வெளிப்படுத்திவிடும். அதனால் தான் இதனை மெய்ப்பொருள் என்று கூறுகின்றனர். ஒரு வகுப்பில் கை கட்டாமல் பாடம் கேட்பவர்களைவிட கை கட்டிக்கொண்டு பாடம் படிப்பவர்கள் 38சத வீதம் குறைவாகத்தான் பாடத்தைக் கவனித்திருக்கின்றார்கள் என்பது ஒரு சோதனை மூலம் தெரியவந்துள்ளது. மேடையில் பேசும் போது கூட எதிரில் உள்ளவரது நிலையைப் பார்க்க வேண்டும். நிறையப் பேர் கைகட்ட ஆரம்பித்தனர் என்றால் உங்கள் கருத்தை அவர்கள் மனம் ஏற்றுக்கொள்ளவில்லை என்று அர்த்தம்.

ஒரு பேச்சாளர் சொன்னார் " நான் ஆயிரம் பேர் கூடியிருந்த ஒரு கூட்டத்தில் பேசிக்கொண்டிருந்தேன். முதல் வரிசையில் உட்கார்ந்திருந்த ஒரேயொரு ஆள் மட்டும்தான் கைகட்டிக் கொண்டிருந்தான். அதைப் பார்த்தவுடன் பேச்சை முடித்துக்கொண்டு கீழே இறங்கிவிட்டேன்" என்றார். " ஒரு ஆளுக்காக பேச்சை நிறுத்தவேண்டுமா?" என்று கேட்டேன். "அந்த ஆள் கையைக்கட்டிக் கொண்டிருந்ததனால் மட்டும் நான் பேச்சை நிறுத்தவில்லை. அப்படிக் கட்டியிருந்த கையில் ஒரு அழுகிய முட்டையை வேறு வைத்திருந்தான். அதைப் பார்த்ததும் தான் நான் சடார் என்று பேச்சை முடித்துக்கொண்டு கீழே இறங்கினேன்" என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# மனோ- மலிக் குழுவின் செயற்பாடு முறிவடையும் தறுவாயில் உள்ளது

## ஜனதாஸ பீரிஸ் எச்சரிக்கை

(கொழும்பு)

ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் இடையே சமரசத்தை ஏற்படுத்தும் பொருட்டு நியமிக்கப்பட்ட மனோ தித்தவெல்ல மலிக் சமரவிக்ரம செயற்குழு முறிவடையும் தறுவாயில் உள்ளது என ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் ஜனதாஸ பீரிஸ் எச்சரித்துள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதிநிதிகளால் முன்வைக்கப்படும் சில பொருத்தமற்ற கொள்கைகள் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது என பி.பி.சிக்கு நேற்று முன்தினம் அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில், ஜனாதிபதி சந்திரிகா குமாரங்கவினதும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினதும் பிரதிநிதிகளால் ஆரம்பிக்கப்பட்ட இப்பேச்சுவார்த்தைகள் இடைநிறுத்தப்பட்ட சமாதானப் பேச்சுவார்த்தைகளை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்கு இன்றியமைதானவாக அமைந்தன.

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தொடர்ந்து செயற்படுவதற்கும் மனோ- மலிக்குழுவினரின் இப்பேச்சுகள் முக்கியமானதாக கருதப்பட்டன.

தேசிய அரசாங்கம் ஒன்றை அமைக்க வேண்டும் என்ற ஜனாதிபதியின் ஆலோசனையை பிரதமர் ஆரம்பத்திலேயே மறுத்துவிட்டார்.

அத்துடன் ஜனநாயக நிறுவனங்களை பலப்படுத்தி, ஊழல்களை ஒழிப்பதற்கு ஐக்கியமாகச் செயற்படவேண்டும் என்ற யோசனையையும் அவர் நிராகரித்துவிட்டார்.

ஜனாதிபதியால் அமைக்கப்படும் கூட்டுச் சமாதானச் சபையில் பிரதமர் இணைத் தலைவராக இருந்து செயற்பட வேண்டும் என்ற பொதுஜன ஐக்கிய முன்னணியின் யோசனைகளையும் அவரின் பிரதிநிதிகள் நிராகரித்துள்ளனர் என அவர் இப்பேட்டியில் மேலும் கருத்துத் தெரிவித்தார். (த-60)

# அம்பாறை மாவட்டம் முஸ்லிம்களின் சுயாட்சிப் பிரதேசம்- ரவு,ப்ஹக்கீம்

(கொழும்பு)

அம்பாறை மாட்டம் முஸ்லிம்களின் சுயாட்சிப் பிரதேசம் என்றும்,அது அவர்களின் தாயகப்பிரதேசம் என்றும் சர்வதேசத்திற்கு உணர்த்தும் முகமாக அம் மாவட்டத்தில் உள்ளூராட்சி சபைகளின் தேர்தல் நடத்தப்படவேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ரவூப்ஹக்கீம் வலியுறுத்தியுள்ளார்.

கல்முனை சாகிராக் கல்லூரியில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனை வலியுறுத்தினார்.

அங்கு தொடர்ந்து பேசிய அவர், இந்தப் பூமியை எந்தவொரு இனத்திற்கும் தாரைவார்த்துக்கொடுக்க முடியாது. இதனைப் பாதுகாத்துக்கொள்ளக்கூடிய கடப்பாடு அனைத்து முஸ்லிம் மக்களுக்கும் உண்டு.



இதனால் தான் இம்மாவட்டத்தில் உளளூராட்சித் தேர்தல் நடத்தப்படவேண்டும் என வலி யுறுத்தி வருகிறோம். வேறு அரசியல் கட்சிகளை குழிபறிக்கும் நோக்குடன் நாம் இதனை வலியுறுத்த வில்லை.

இன்று தலைதூக்கியுள்ள சிங்களப் பெரும் தேசியவாத அரசியலுக்கு உந்து சக்தியாக முஸ்லிம் காங்கிரஸ் மாறமுடியாது.

சில முஸ்லிம் பிரதிநிதிகள் இடறிவிழுந்து போய் பேரினவாதத்துடன் இணைந்து கொள்வதற்கு முஸ்தீபுகள் செய்வதை முஸ்லிம் சமூகம் ஒரு போதும் அங்கீகரிக்காது.

எனினும் இவ்வாறு பிரிந்து சென்று பேரினவாதிகளுடன் இணைந்து செயற்படுவோரை ஒன்று சேர்க்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதால், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அமைதியாக இருக்கிறது என்றார். (தி-61)

## இராசிபலன்

**01.02. 2004**

**(தை 18, ஞாயிற்றுக்கிழமை)**

| | |
|---|---|
| தசமி | காலை 7.40 மணிவரை |
| ரோகிணி | முன்னிரவு 7.04 மணிவரை |
| இராகுகாலம் | 5.06 - 6.36 மணிவரை |
| சுபநேரம் | 9.36 - 11.06 மணிவரை |

**மேடம்**
மனச் சோர்வு, எடுத்த காரியம் தாமதமாகும், பணவிரயம், அதிக வார்த்தை.

**இடபம்**
தெய்வ தரிசனம், புதிய சிந்தை, காரிய அனுகூலம், போசனசுகம்.

**மிதுனம**
காரிய அலைச்சல், உடல்நலக் குறைவு, வேலையில் ஆர்வம், தனவிரயம்.

**கடகம்**
கீர்த்தி, குடும்ப நலம், புத்தி சாதுரியம், முயற்சி பலிதம்.

**சிங்கம**
பிறரது ஒத்துழைப்பு, போசன நன்மை, நல்ல முயற்சி, முயற்சி கைகூடும்.

**கன்னி**
பிரயாணம், நிர்ப்பந்த நிலை, காரிய தாமதம், தொழில் சிந்தை.

**துலாம்**
எதிர்பாராத பிரச்சினை, உடல் வியாதி, தர்மம், காரிய தாமதம்.

**விருச்சிகம்**
நல்ல செய்தி, கலந்துரையாடல், புதிய திருப்பம், காரிய அனுகூலம்.

**தனுசு**
தெய்வ சிந்தை, புதிய விடயம், காரிய சித்தி, விருந்துபசாரம்.

**மகரம்**
வியாபார சிந்தை, செல்வாக்கு குறைவு, குடும்பக் கவலை, திடீர் நன்மை.

**கும்பம்**
உஷ்ண நிலை, நல்ல வரவேற்பு, முயற்சி தாமதம், தனவிரயம்.

**மீனம்**
கூட்டு முயற்சி, பிரயாண நன்மை, நல்ல சம்பவம், சுவாரஸ்யம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)
- வளவன்.

## உரும்பிராய் மாணவி மரணம்

# விடுதலையான நபர் மீண்டும் கைதானார்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலை மாணவியின் மர்ம மரணம் தொடர்பாக சந்தேகத்தில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலைமையில் குற்றமற்றவர் என விடுவிக்கப்பட்ட தில்லையம்பலம் ரமணன் கடந்த வியாழக்கிமை மீண்டும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கடந்த 2002ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 27ஆம் திகதி உரும்பிராய் சந்திரோதய வித்தியாசாலைக் கிணற்றில் இருந்து 10 வயதுச் சிறுமியான செ.துவாரகா சடலமாக மீட்கப்பட்டார்.

இது தொடர்பில் சந்தேகத்தில் கைது செய் யப்பட்டிருந்த பாடசாலைக் காவலாளி மீது குற்றம் சுமத்துவதற்குரிய போதிய ஆதாரங்கள் இல்லாத காரணத்தினால், கடந்த 8ஆம் திகதியன்று யாழ்.நீதிமன்ற மேலதிக நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரம் அவரை விடுவிக்குமாறு உத்தரவிட்டிருந்தார்.

சிறுமியின் மரணம் தொடர்பாக தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வந்த பொலிஸார் இம் மரணம் தொடர்பில் மேலும் சில தடயங்களை மீட்டுள்ளனர்.

இதையடுத்தே நீதிவானின் உத்தரவில் அவர் மீண்டும் கைது செய்யப்பட்டு யாழ்.சிறையில் வைக்கப்பட்டுள்ளார். (த-3)

# வழக்கு விசாரணை 9ந் திகதி நடைபெறும

(யாழ்ப்பாணம்)

யாழ்.நீதவான் நீதிமன்றில் நாளை 2ந் திகதி நடைபெற வருக்கும் வழக்கு விசாரணைகள் அனைத்தும் எதிர்வரும் 9ந் திகதி நடைபெறும் எனப் பதிவாளர் அறிவித்துள்ளார்.

ஹஜ்ஜுப் பெருநாள் விடு முறைதினம் நாளை திங்கட்கிழமை அனுஷ்டிக்குமாறு அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்டதையடுத்தே வழக்கு விசாரணைகள் ஒத்தி வைக்கப்பட்டுள்ளன. (ச)

# தேசவழமை

வரலாற்றுத்துறைப் பேராசிரியர்
**சி.பத்மநாதன்**
பேராதனைப் பல்கலைக்கழகம்.

32

**முதலாம் பகுதி**

**தேசவழமைச் சட்டம்**

## யாழ்ப்பாண இராச்சியம்

### சாயவேரும் சாயத்தயாரிப்பும்

யாழ்ப்பாண இராச்சியத்தில் உற்பத்தியாகிப் பிறதேசங்களுக்கு ஏற்றுமதியான பொருட்களில் சாயவேர் குறிப்பிடத்தகுந்தது. தமிழரசர் காலம் முதலாகச் சாயவேர் தென்னிந்தியாவில் உள்ள துறைமுகப் பட்டினங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. அத்துடன் சாயம் காய்ச்சுதலும் ஒரு குடிசைக் கைத்தொழிலாக அக்காலத்தில் விருத்தி பெற்றிருந்தது. யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் காரைதீவு முதலான தீவுகளிலும் மன்னாரிலுஞ் சாயவேர் பெருமளவில் உற்பத்தியாகியது. சாயவேர் அரசனின் ஏகபோக உரிமையாகக் கருதப்பட்டது. சாயவேரைக் கிளறுவதும் பின் அதனை அரசாங்கத்தின் களஞ்சியங்களில் ஒப்படைப்பதும் ஊழியக்காரரின் கடமையாகும். சாயம் காச்சுவதற்குச் சயவேரைத் தண்ணீரிற் போட்டு ஊறவிடவேண்டும். நன்றாக ஊறிய பின் நீரை வேறாக்கி அதனை வடித்துப் பாத்திரங்களில் ஊற்றிக் காய்ச்சுதல் வேண்டும். அது குழம்பாகி வந்ததும் பாத்திரத்தை இறக்கி வைத்து, ஆறவிட்டுப் பின்பு பல நாட்களுக்கு வெய்யிலிற் காயவைப்பார். அது காய்ந்து கட்டியாகிவிடும். பின்பு அதனைச் சதுரமான துண்டுகளாக வெட்டிப் பக்குவப்படுத்தி வியாபாரிகளுக்கு விற்பனை செய்வார்கள். சாயம் காச்சுமிடத்துத் தேவைக்கேற்ப வண்ணக்கலவைகளைச் சேர்த்துக்கொள்வர். பொதுவாகப் பச்சை,சிவப்பு, நீலம் ஆகிய நிறங்களிலே அந்நாட்களிற் சாயத்தைத் தயாரித்தனர். தேசாதிபதியால் எழுதப்பெற்ற அறிக்கை ஒன்றிலே சாயவேர் பற்றி மேல்வரும் குறிப்பு உண்டு:

''சாயப்பொருள்கள் மூலம் கொம்பஞ்ஞீயவுக்குக் கிடைக்கும் வருமானம் கணிசமானதாகும். மன்னார்,காரைதீவு ஆகிய பகுதிகளில் உற்பத்தியானவற்றை இந்த வருடம் கொம்பஞ்ஞீயவின் தேவைகளுக்கென ஒதுக்கி உள்ளேன் என்பதை நீங்கள் அறிவீர்கள். எஞ்சியுள்ளவற்றிலிருந்து எட்டு மாதங்களில் 2 ஆயிரம் பணம் இலாபம் கிடைத்துள்ளது. யாழ்ப்பாணம்,மன்னார்,தீவு பற்று ஆகியவற்றிலிருந்து 350 வஹார் வரையான பொருள்கள் கிடைக்கும். யாழ்ப்பாணத்தின் 4 மாகாணங்களிலும் தீவு பற்றிலும் சாயவேரைக் கிளறுவதற்கு வஹார் ஒவ்வொன்றுக்கும் 3 இறையால் வீதம் பணம் செலவாகின்றது.மன்னாரில் 15 இறையால் செலவாகின்றது. அங்குள்ள சாயவேர் தரமிக்கது. காரைதீவில் உள்ளதைக் காட்டிலும் சிறந்தது. காரைதீவில் 5 இறையால் செலவாகின்றது'' உலாந்தாக்காரர் சோழ மண்டலக் கரையில் இருந்து துணிகளை இறக்குமதி செய்து அவற்றைச் சாயம் பூசுவதற்கென்று சாயக்காரரிடம் ஒப்படைத்தார்கள். சாயக்காரரிடம் பகுந்துகொடுப்பதற்கென்று அரசாங்கத்தின் நிலையங்களில் 1694 நவம்பர் மாதத்தில் 60,106 இறாத்தல் சாயவேர் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது.

### நெசவுத்தொழில்

ஆரியச்சக்கரவர்த்திகளிற் சிலர் நெசவுத் தொழிலை விருத்தி செய்வதெற்கென்று சோழ மண்டலம்,தொண்டை மண்டலம் ஆகியவற்றில் இருந்து நெசவாளரை வரவழைத்து நல்லூரிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் குடியிருத்தினார்கள் என்று சொல்லப்படுகின்றது. ஆயினும் நெசவுத்தொழில் ஒரு பிரதான தொழிலாக யாழ்ப்பாணத்தில் விருத்தி பெறவில்லை. உள்ளூர்ப் பாவனைக்குத் தேவையான புடவைகளில் ஒரு சிறிய அளவினையே இவ்வாறு உற்பத்தி செய்ய முடிந்தது. யாழ்ப்பாணத்தில் உற்பத்தி செய்யப்பெற்ற துணிகளும் சற்றுக் கனதியானவையாகவும் தரம் குறைந்தனவாகவுமே காணப்பட்டன.

ஒல்லாந்தர்கள் கணிசமான அளவிலே நெசவுத்தொழில் விருத்திக்கு ஊக்கமளித்தனர். தென்னிந்தியாவில் இருந்து நெசவாளரை அழைத்து வந்து குடியிருத்த முயற்சிகளை மேற்கொண்டனர். நெசவாளருக்கெனத் தனியான தோம்பினை எழுதி வைத்தனர். யாழ்ப்பாணத்தில் உற்பத்தியான துணிகளை ஜாவா தேசத்திற்கும் ஐரோப்பாவிற்கும் ஏற்றுமதி செய்தனர். உளளூரில் உற்பத்தியான துணிகள் மீது 30 வீதம் விற்பனை வரி அரசினரால் வசூலிக்கப்பட்டது. சுவார்திகுறூன் கொம்மாந்தராகவிருந்த காலத்திலே வரிசை கூடிய சமயம் ஒன்றிலே தலைமைக்காரர் செய்த முறைப்பாட்டின் விளைவாக இதனை 20 வீதமாகக் குறைப்பதற்கு அரசாங்கம் முடிவு செய்தது.

### யானைகள்

மத்திய காலத்தில் இலங்கையில் உள்ள வனங்களில் யானைகள் பெருகி இருந்தன. பரந்தன்வெளி முதலாக மாத்தறை வரையுள்ள காடுகளில் அவை உலாவித் திரிவதுண்டு யானைகள் அரசனின் ஏகபோக உரிமையாகக் கருதப்பட்டன. வன்னிப் பகுதிகளிலுள்ள வன்னியர் தமது பற்றுக்களில் உள்ள யானைகளைப் பிடித்து அரசருக்குத் திறையாகக்கொடுப்பது வழமை. அடங்காப்பற்று வன்னியர் யானைகளை யாழ்ப்பாணத்து அரசருக்குத் திறையாகக்கொடுத்தனர். அரசனும்,பின்பு போர்த்துக்கேயரும் உலாந்தாக்காரரும் அவற்றை வெளிநாட்டு வியாபாரிகளுக்கு விற்பதன் மூலம் அதிக வருமானத்தைப்பெற்றனர்.

யானைகளை இந்தியாவிலே பல தேவைகளுக்குப் பயன்படுத்தினார்கள். அவற்றைப் பழக்கிப் போர்களிலே உபயோகப்படுத்தினார்கள். பாரங்களை இழுப்பதற்கும் சில விடங்களிலே அவை பயன்பட்டன.கோயில்களில் யானைகளை வைத்திருந்தார்கள். அரசரும் பிரதானிகளும் அவற்றை தங்கள் அரண்மனைகளுக்கும் மாளிகைகளுக்கும் அண்மையில் வைத்து பராமரிப்பதோடு, அரசர் வைபவரீதியாக உலாப்போகும் சமயங்களிலும் யானைகளைப் பயன்படுத்தினார்கள். திசையாயிரத்து ஐந்நூற்றுவர் முதலான வணிக கணத்தாரின் சாசனங்களிலே விற்பனை நிலையங்களில் உள்ள யானைப்பந்திகள் பற்றிய குறிபபுகள் உண்டு. விஜயநகரத்து ராஜர்கள், டில்லி சுல்தான்கள், வங்காளத்து நவாபுகள், பாஹ்மனி சுல்தான்கள் முதலிய அரசர்கள் யானைகளை வணிகரிடமிருந்து கொள்வனவு செய்தனர். சோழமண்டலக்கரையிலிருந்தும் வங்காளத்திலிருந்தும் வரும் வணிகர் யானைகளைக் கொள்வனவு செய்து சென்றனர். அவர்கள் வரும் பொழுது நெல், அரிசி ஆகியவற்றைக் கப்பல்களில் ஏற்றிவருவது வழக்கம். (தொடரும்)

---

**வடமராட்சி வலய**

# தரம் –5 புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள்

(மருதங்கேணி)

வடமராட்சி வலயப் பாடசாலைகளில் தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் விபரம் பாடசாலை ரீதியாக கீழே தரப்படுகிறது.

**பரு. இந்து மகளிர் கல்லூரி**

சி.சாருசா (154), எஸ்.சோபிகா (121), எஸ்.தபுலாசினி (120), கே.துர்க்கா (133), எஸ்.ஆரணி (142), ஜி.சகிந்துசா (147), ஏ.அஜிதா (118), எஸ்.கிருசுபா (138), பி.ஜனனி (137), கே.கயந்தினி (122), எஸ்.மிசியனா (130), ஜி.டெனிக்கா (125), எம்.கௌசிகா (124), ஜே.கீர்த்தனா (125), பி.மயூரிகா (123), ரி.ரஜிதா (129), ரி.சாருபி (123), எஸ்.தர்சிகா (149).

**மருதங்கேணி இந்து தமிழ் கலவன் பாடசாலை**

கே.கஜேந்திரன் (135), கே.நிசாநதன் (134).

**தாளையடி றோ.க.த.க. பாடசாலை**

எம்.இனிதா (121).

**பரு.தட்டாதெரு தமிழ் கலவன் பாடசாலை**

எஸ்.பிரசாந் (122).

**தம்பசிட்டி மெ.மி.த.க. பாடசாலை**

எஸ்.கார்த்திகாயினி (147), கே.நிதர்சனா (121), வி.சரஞ்சா (145), எஸ்.துசாந்த் (138), எஸ்.பரதன் (127), என்.அபயபிரதாபன் (123), கி.தாட்சாயினி (118).

**துன்னாலை மேற்கு தமிழ் கலவன் பாடசாலை**

பி.கௌசிகன் (136), ஜே.நிருபன் (130), கே.பிரசாந்த் (136), கே.சிந்துஜன் (132), கே.கேமசாலினி (146), வி.நிறஞ்சினி (125), எஸ்.சோபிகா (122), எஸ்.தேவகி (146), எஸ்.தினேஸ் (147), என்.கோணேஸ்வரன் (120), எஸ்.சர்மிளா (137),

**வல்வை மகளிர் ம.வி.**

ஜே.அங்கரன் (148), எஸ்.ஜெயபாலன் (126), பி.நந்தினி (118), எஸ். சிவதர்சினி (126), ர.சுபாசினி (123),

**அல்வாய் மேற்கு திக்கம் சித்தி விநாயகர் வித்தி**

எஸ்.சுஜிதா (137), எஸ்.பிரகாஜ் (118), எஸ்.பிரியாணி (150),

**அல்வாய் வடக்கு றோ.க.த.க. பாடசாலை**

ஏ.யஸ்மின் (136),

**பொலிகண்டி இந்து தமிழ் கலவன் பாடசாலை**

யு.சோபிதா (128), ஏ.கே.அனிஸ்கா (132), பி.பிரியா (118), எஸ்.பிரியதர்சினி (147).

**புலோலி மெ.மி.த.க. பாடசாலை**

யு.துளசிகன் (138), எஸ்.அனுதர்சன் (118).

**கற்கோவளம் தமிழ் கலவன் பாடசாலை**

தி.ஜெசிந்தா (119), ரி.கௌசிகா (123), ஆர்.கயல்விழி (118), எஸ்.அனோஜா (120), பி.சூரியா (149).

**வல்வெட்டித்துறை றோ.க.த.க.**

ஜி.சுதர்சன் (158), ரி.நிருஜா (140), கே.விஜிதா (131).

**பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தி.**

என்.கஜேந்தினி (121), ரி.அஜந்தன் (136), பி.பானுகோபன் (130), எஸ்.கவஸ்கான் (119), கே.பிரசாந்த் (119), எஸ்.ஜெயசீலன் (138), எஸ்.சதீஸ்ராம் (141).

**புற்றளை ம.வி.**

எஸ்.சுகன்யா (135), எஸ்.கபிலன் (153), வி.கீர்த்தனன் (126), ஜி.துசாந் (119), என்.மதுரா (127), பி.மைதிலி (128), என்.சாரங்கா (121), எஸ்.இளங்கீரன் (136), ரி.கமலராஜ் (125), எஸ்.சயித்கோபி (135), எஸ்.விஸ்ணுகுமாரன் (118), எம்.மிருசா (139), வை.தபிதா (160), கே.விதுஜா (142).

**மேலைப் புலோலி சைவ பிரகாச வித்தி.**

எஸ்.அனுராஜ் (122), ரி.தனுசன் (119), எம்.சாரங்கா (140), பி.ராஜினி (128), எஸ்.சக்திதாசன் (136).

**தும்பளை சிவப்பிரகாச மகா வித்தி.**

எஸ்.தர்சிகா (132), பி.சஞ்சீவன் (122), ரி.துவாரகன் (154), பி.மகிதரன் (131), எஸ்.மயூரன் (137), ஜெ.காண்டீபன் (124), ஜி.மாதங்கி (126), ரி.வித்தியா (122), பி.ஆரணி (133), ரி.பிரிதாபானு (139), எஸ்.தீசிகா (120).

**வல்வெட்டி இந்து தமிழ் கலவன் பாடசாலை**

எஸ்.செல்வசேகரன் (120), எம்.அனுத்தியா (127).

**கட்டைவேலி மெ.மி.த.க. பாடசாலை**

பி.கிரித்திகா (128), கே.துஜ்சந்தினி (133), ஈ.அன்பரசன் (139), என்.சிந்துஜா (141).

**இமையாணன் அ.த.க. பாடசாலை**

ஜி.புவிசாந்தன் (118), ஆர்.கேசவர்த்தன் (128), கே.ராஜி (125).

**வதிரி இருதயக் கல்லூரி**

எஸ்.அருள்குமார் (134), கே.கீதாஞ்சலி (119), ஆர்.சுகிலா (153), பி.இலக்ஜ்சி (187).

**நெல்லியடி அ.மி.த.க. பாடசாலை**

ஜி.துசாந்தன் (135), பி.ஆரத்தியா (133), எம்.பிரிந்தா (143), எஸ்.தேனுகா (120), எஸ்.அர்சித்தியா (152), பி.அபிசாலிகா (128), வி.கிரிசேசதன் (133), எஸ்.ஆதவன் (141), என்.துவாரகன் (142), பி.சுதாந்தி (141), கே.தனுஜா (118), பி.அபிராமி (161), ஏ.சுசாந்தினி (120), ரி.சுதன் (131), யு.அனுகரன் (144), பி.கறிதர்சன் (129), கே.தர்சனாத் (126), வி.பகீரதன் (144).

**கரணவாய் வேதாரணிய வித்தி.**

என்.ஆராதனா (141), என்.சுபாஸ்கனி (123).

**கரவெட்டி விக்கினேஸ்வரா கல்லூரி**

எஸ்.கௌசிகன் (125), கே.தேன்மொழி (139), என். அனுராஜ் (127), ரி.கவிராஜ் (145), எம்.கிரிசாந் (119), ஏ.ராஜ்கரன் (135), என்.தினகரன் (121).

**கட்டைவேலி ஞானசாரியார் கல்லூரி**

ரி.அருந்துசா (153), எஸ்.சரத்பவன் (159), பி.தர்சிகன் (147), என்.துவாரகன் (154).

**துன்னாலை காசிநாதர் வித்தி.**

என்.கிரிராம் (150), எஸ்.கவினா (160).

**கம்பர் மலை அ.த.க.பாடசாலை**

ரி.பாரதி (135), என்.கோவர்த்தன் (129), ஜே.குகப்பிரசாந் (127).

**கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தி.**

எஸ்.கிருசாந் (145), எம்.உசாந்தி (129), என்.ஞானகௌரி (123), எம்.கலைமதி (122), என்.தேனுஜா (122), ரி.பிரியநந்தினி (152), எஸ்.துவாரகன் (133), ஆர்.ஐங்கரன் (130), என்.லோஜிதன் (134), என்.தினாளன் (121).

**கரணவாய் தாமோதர வித்தி.**

கே.சுபரதன் (138).

**கரணவாய் மணிகாரன் தோட்ட தமிழ் கலவன் பாடசாலை**

வி.கலைவாணி (121), கே.விநோதா (129).

**அல்வாய் சின்னத்தம்பி வித்தி.**

ஏ.ஜெயந்தி (138).

**உடுப்பிட்டி மகளிர் கல்லூரி**

என்.கோபிகா (123), ஜி.ஆர்.சக்கினா (118).

**கரவெட்டி தேவரயாளி இந்துக் கல்லூரி**

எம்.அலுனானா (118), பி.சுஜிர்த்தனா (128).

**உடுப்பிட்டி அ.மி.கல்லூரி**

ரி.கோபிராஜ் (119), வி.கஜன் (118), கே.செந்துரன் (139), வி.துவாரகன் (122), என்.நிசாந்தன் (139), பி.கௌதமன் (122), ஆர்.யோகிகன் (126). (உ-35,45)

# உளவு அமைப்புக்கள் தவறிழைத்தனவா?

# குற்றச்சாட்டுக்கு அமெரிக்க அதிபர் ஆப்பு

(வாஷிங்டன்)

ஈராக்கின மீது போர் தொடுப்பதற்கு முன்னதாக அமெரிக்க உளவு அமைப்புக்கள் தவறு இழைத்தனவா என்ற குற்றச்சாட்டு பற்றி விசாரணை நடத்தப்படவேண்டும் என்ற கோரிக்கையை அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யு புஷ் நிராகரித்துள்ளார்.

சதாம் ஹுசைனிடம் பேரழிவினை ஏற்படுத்தும் ஆயுதங்கள் இருப்பதாக போருக்கு முன்பு உளவு ஏஜென்சிகள் தகவல் தந்த போதிலும் கூட ஈராக்கில் பேரழி ஆயுதங்கள் இல்லாது போன காரணங்களைக் கண்டறிவது அவசியம் என்று ஜோர்ஜ் டபிள்யு புஷ் கூறினார்.

முன்னதாக இந்த வாரத்தொடகத்தில் அமெரிக்கப் புலனாய்வு அமைப்பின் முன்னாள் தலைவரும் முன்னாள் அமெரிக்க ஆயுத ஆய்வாளருமான டேவிற்கே பேரழிவு ஆயுதங்கள் எதையும் தாம் ஈராக்கில் காணவில்லை என்று கூறியிருந்தார்.

இதனிடையே பேரழிவு ஆயுதங்கள் பற்றிய ஈராக்கிய உளவுத் தகவல்கள் பற்றி சுயேற்சையான விசாரணை நடத்துவது குறித்து அதிபர் மாளிகை பரிசீலித்து வருவதாக அமெரிக்க அரசை மேற்கோள் காட்டி தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நடவடிக்கையை மேற்கொள்வதற்காக பல்வேறு யோசனைகளை அமெரிக்க நிர்வாகம் பரிசீலித்துவருவதாக அமெரிக்கத் துணை அதிபர், அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் தெரிவித்துள்ளார். (து-9)

## பி.பி.ஸி.யின் மற்றுமொரு அலுவலர் இராஜினாமா

(லண்டன்)

பி.பி.ஸியின் மற்றுமொரு அலுவலர் தனது பதவியை நேற்று முனதினம் இராஜினாமாச் செய்துள்ளார்.

நீதிபதி ஹுட்டன் பிரபுவினால் நடத்தப்பட்ட விசாரணையில் நடுநாயகமாக விளங்கிய பி.பி.ஸியின் செய்தியாளரான அன்ரோ ஹிலிக்கன் இராஜினாமாச் செய்த மூன்றாவது நபராவார்.

ஈராக்கில் நடத்தப்பட்ட ஆயுத சோதனையின் அறிக்கையை பிரிடிஷ் அரசாங்கம் வேண்டுமென்றே திரிபுபடுத்தியதாக பி.பி.ஸி வெளியிட்ட செய்தியில் எவ்வித உண்மையும் இல்லையென நீதிபதி ஹுட்டன் விசாரணை அறிக்கையில் குறிப்பிடப்பட்டதைத் தொடாந்து, இந்த இராஜினாமாக்கள் இடம்பெற்றுவருகின்றன.

பி.பி.ஸி.யின் ஆளுநர் சபைத் தலைவர் கெவின் டேவிஸ் கடந்த புதன்கிழமையும்,பணிப்பாளர் நாயகம் ஹிரெக்டாக் கடந்த வியாழக் கிழமையும் இராஜினாமாச் செய்திருந்தது குறிப்பிடத்தக்கது. (து-9)

## ஐ.நா.சபையின் குழுவுக்கு அதிகூடிய பாதுகாப்பு

### ஈராக்கிலுள்ள அமெ.படை அறிவிப்பு

(பக்தாத்)

ஐக்கிய நாடுகள் சபையின் குழுவினருக்கு அதிகூடிய பாதுகாப்பை வழங்கமுடியும் என ஈராக்கிலுள்ள அமெரிக்கத் தலைமையிலான படைத்தரப்பினர் அறிவித்துள்ளனர்.

இதனையடுத்து ஈராக்கில் முன்னதாக தேர்தலை நடாத்துவது குறித்து ஆராய்வதற்கான குழுவினரை ஓரிரு தினங்களில் அனுப்பவிருப்பதாக ஐ.நா.சபையின் செயலாளர் நாயகம் கோபி அனான் அறிவித்துள்ளார்.

ஈராக்கின் பாதுகாப்பு நிலைமைகள் குறித்து ஆராய கடந்தவாரம் ஒரு குழுவினரை ஐ.நா சபையின் செயலாளர் நாயகம் கோபி அனான் அனுப்பியிருந்தார்.

ஈராக்கின் அதிகாரத்தை ஈராக் மக்களிடம் ஜுன் மாதத்தில் ஒப்படைக்கும் முன்னர் தேர்தலை நடாத்துவது சாத்தியம் இல்லையென அமெரிக்கத் தரப்பு தெரிவித்திருந்தது.

இந்நிலையிலே ஈராக்கில் முன்னதாக தேர்தலை நடாத்துவது குறித்து ஆராய்வதற்கான குழுவினரை ஓரிரு தினங்களில் ஐநா சபை அனுப்பவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (து-9)

## பறவைக்காய்ச்சல் நோயினால் வியட்நாமில் ஆறுபேர் பலி

(ஹனாய்)

வியடநாமில் பறவைக்காய்ச்சல் நோய்காரணமாக 6 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த நோய்க்கு முழு அளவிலான தீர்வு காணப்படும் வரை கோழி இறைச்சியை ஏற்றுமதி செய்யக் கூடாது என அந்த நாடு தடைவிதித்துள்ளது.

அதிகாரிகள் மத்தியில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தின் போது,

வியட்நாமின் பிரதமமந்திரி இந்த அறிவுறுத்தலை விடுத்தார்.

ஏற்கனவே 70 இலட்சம் கோழிகள் கொல்லப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

வியட்நாமின் 64 மாகாணங்களில் 41 மாகாணங்களில் உள்ள கோழிப்பண்ணைகளில் இந்த நோய் பரவியுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

இதறகிடையில் தாய்லாந்தின் பிரதமமந்திரி தக்ஷின் சின்னவற்றா நேற்றுக காலை விடுத்த அறிக்கையில் சமைக்கப்பட்ட கோழி இறைச்சியை உண்பதில்எந்தவித அபாயமும் இல்லை என்றும் இது முற்றிலும் பாதுகாப்பானது என்றும் அறிவித்துள்ளார்.

தாய்லாந்திலுள்ள மொத்தம் 18 கோடி கோழிகளில் ஒரு கோடி 40 இலட்சம் கோழிகள் இதுவரை கொல்லப்பட்டுள்ளன.

இந்த நோய் ஆசியாவின் 10 நாடுகளில் பரவியுள்ளது என்றும் வியட்நாமில் 6 பேரும், தாய்லாந்தில் 2 பேரும் இறந்துள்ளனர் என்றும் உலக சுகாதார ஸ்தாபனம் அறிவிததுள்ளது. (து-9)



ரோமானியாவில் தற்போது ஏற்பட்டுள்ள கடுமையான பனிப் பொழிவினால் அங்குள்ள வீடுகள் மற்றும் மரங்கள் பனியினால் மூடப்பட்டு வெண்கம்பளமாகக் காட்சி தருகின்றது.



சென்னை அண்ணா அறிவாலயததில் தி.மு.க. தலைவர் கருணாநிதியுடன் தமிழ்நாடு காங்கிரஸ் முன்னாள் தலைவர்கள் குமரி ஆனந்தன் , ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் , தலைவர் ஜி.கே. வாசன் , அகில இந்திய காங்கிரஸ் பொதுச் செயலர் கமல்நாத, முன்னாள் அமைச்சர்கள் துரைமுருகன் , கோ.சி. மணி ஆகியோர் .

## தீவிரவாதிகளின் மறைவிடங்களில் சவூதி பொலிஸ் தேடுதல் வேட்டை

(ரியாத்)

சவூதியரேபியாவின் தலைநகர் ரியாத்தில், தீவிரவாதிகள் ஒளிந்திருப்பதாகக் கூறப்படும் 2 இடங்களில் அந்நாட்டுப் பொலிஸார் இரு தினங்களுக்கு முன்பு முற்றுகையிட்டு தீவிர தேடுதல் நடத்தியுள்ளனர்.

சவூதியரேபியாவில் பயங்கர வாதத்தாக்குதல்களை நடத்த இந்தத் தீவிரவாதக்குழு திட்டமிட்டிருப்பதாகக் கிடைத்த தகவலை அடுத்தே இந்தத் தேடுதல் நடத்தப்படடது.

இந்தத் தேடுதலின் போது தீவிரவாதிகளின் மறைவிடங்களில் இருந்து வெடிபொருட்கள், கிரனைட்டுக்கள், குண்டுகள் அடங்கிய வாகனம் ஆகியவற்றை சவூதியரேபியப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

சவூதியரேபியாவின் புனித நகரமான மக்காவில், ஹஜ் யாத்திரை நேற்று முன்தினம் ஆரம்பமாவதற்கு முதல்நாளே தீவிரவாதிகள் மறைந்திருந்த வீடுகளைப் பொலிஸார் முற்றுகையிட்டுள்ளனர்.

ரியாத்தின் கிழக்குப் பகுதியில் இந்த முற்றுகை இடம்பெற்ற அதே வேளை மோதல்களும் இடம்பெற்றதாக சவூதியரேபியாவின் உள்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. (து-9)



பறவைகள் காலம் மாறுவதற்கேற்ப தங்களது வசிப்பிடங்களையும் மாற்றிக் கொள்ளும். கோடை காலததில் நீர் நிறைந்த பகுதிகளுக்கு இடம்பெயரும். ஹொங்கொங்கில் இலையுதிர்ந்த மரக கிளைகளில் இலைக்கு ஈடாக அமர்ந்திருக்கும் பறவைகள்.

### உலக தரிசனம்

## பறவைக் காய்ச்சல் நோயினால் இசைநிகழ்ச்சி ரத்து

(சிங்கப்பூர்)

தற்போது மிகவேகமாகப் பரவி வரும் பறவைக் காய்ச்சல் நோய் காரணமாக உலகப் புகழ்பெற்ற பாடகரான குருன் அன்ரிவிலலியஸ் ஆசிரியாவிற்கான தனது விஜயத்தை ரத்துச் செய்துள்ளார்.

மார்ச் மாதம் 6 ஆம் திகதி சிங்கப்பூரில் நடைபெறவுள்ள இசை நிகழ்ச்சியொன்றில் கலந்துகொள்ள 20 பேர் கொண்ட குழுவொன்றுடன் செல்ல இவர் தீர்மானித்திருந்தார்.

எனினும், தற்போது பரவிவரும் பறவைக் காய்ச்சல் நோயின் அசசம் காரணமாக தமது இசைச் குழுவின் பயணத்தை குருன் அன்ரிவில்லியம்ஸ் ரத்துச் செய்துள்ளார்.(து)

# 2004 ஆம் ஆண்டு சமாதான விருதுக்கு புஷ், பிளேயர் பெயர்கள் பிரேரிப்பு

(வாஷிங்டன்)

2004 ஆம் ஆண்டுக்கான நோபல் சமாதான விருதுக்காக,அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ்டபிள்யூ புஷ், பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயர் ஆகியோரின் பெயர்கள் பிரேரிக்கப் பட்டுள்ளன.

ஈராக்கில் பேரரிழிவுகளை ஏற்படுத்தும் ஆயுதங்கள் இருப்பதை நிருபிக்க முடியாத நிலையிலேயே இவ்விருவரது பெயர்களும் பிரேரிக்கப்பட்டுள்ளன்.

நோபல் சமாதான விருதுகளுக்கான பிரேரணைகள் முன்வைக்கப்படவேண்டிய கடைசித்தினம் இன்றாகும்.

இந்நிலையில் பிரேரணைகள் தமக்கு வந்து குவிந்த வண்ணம் இருப்பதாக நோர்வே நோபல் மன்றப் பணிப்பாளர் ஜி.ஐ.லண்டஸ்ற் கூறியுள்ளார்.

நாளாந்தம் பெருந்தொகையான கடிதங்களும் ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட மின்னஞ்சல்களும் கிடைப்பதாக அவர் குறிப்பிட்டார்.

இவற்றில் விருதுகளைப் பெறக் கூடியவர்களுக்கு ஆதரவாகவும் எதிராகவும் கருத்துக்கள் அடங்கியுள்ளதாகவும் மேலும் அவர் தெரிவித்துள்ளார்.

இதுவரை கிடைக்கப் பெற்றுள்ள பிரேரணைகளில் பரிசுத்த பாப்பரசர் 2ஆவது அருளப்பர் சின்னப்பர் செக் நாட்டின் முன்னாள் ஜனாதிபதி லெ.:.னோஹவாய், சீனப் பிரமுகர்கள் ஆகியோரும் அடங்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, கடந்தவருடம்நோபல் சமாதானவிருது, ஈரானின் மனித உரிமைகளுக்கான பெண் சட்டத்தரணி ஷீன் எபாத்திகது வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (து-9)

## புனரமைப்பு நடவடிக்கைக்கு உதவ ஜப்பான் பாராளுமன்றம் அங்கீகாரம்

(டோக்கியோ)

ஈராக்கின் புனரமைப்பு நடவடிக்கைக்கு உதவுவதற்கென ஜப்பானிய வீரர்களை பக்தாத்துக்கு அனுப்புவது சம்பந்தமான பிரேரணைக்கு ஜப்பான் பிரதிநிதிகள் சபை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இது குறித்து அதிகாரிகள் கருத்து வெளியிடுகையில், இந்தப் பிரேரணை பாராளுமன்றத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் பாராளுமன்ற அங்கத்தவர்கள் பல தரப்பட்ட கருத்துக்களை வெளியிட்டிருந்தனர் என்று தெரிவித்துள்ளனர்.

அதிருப்தி அடைந்த அங்கத்தவர்களில பலர் வாக்கெடுப்பைப் பகிஷ்கரித்துள்ளனர்.

மேலும் பலர் பாராளுமன்றக் கட்டிடத்தில் இருந்து வெளிநடப்புச் செய்துள்ளனர். பல அங்கத்தவர்கள் கூட்டத்தில் சமூகமளிக்கவில்லை.

இந்தப் பிரேரணையை பிரதிநிதிகள் சபை ஏற்றுக் கொண்டுள்ளதனால் ஜப்பானின் செனற்சபை அடுத்தவாரம் இதனை ஆராயவிருக்கிறது. (து-9)

# நோர்வேயின் பங்களிப்புக் குறித்த ஆனந்தசங்கரியின் கோரிக்கையை ஏற்று நடக்க ஜனாதிபதி சம்மதம்

(கொழும்பு)

**இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வு நோக்கிய, சமாதான முன்னெடுப்பிற்காக பல வழிகளிலும் பாடுபட்டு வந்த நோர்வே அரசின் ஒத்துழைப்பைத் தொடர்ந்தும் பெற வேண்டும் என்ற தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வி.ஆனந்தசங்கரியின் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நோர்வேயின் அனுசரணை தொடர்ந்தும் பெறப்படும் என்ற உறுதி மொழியை அவரிடம் நேரிடையாகவே வழங்கியுள்ளார்.**

சமாதான முயற்சிகள் மற்றும் அதனோடு தொடர்புடைய விடயங்கள் தொடர்பாக ஆனந்தசங்கரியினால் ஜனாதிபதிக்கு அண்மைக் காலங்களில் அனுப்பப்பட்ட கடிதங்கள் தொடர்பில் ஜனாதிபதியின் அழைப்பின் பேரில் நேற்று முன்தினம் ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற சந்திப்பின் போதே மேற்படி உறுதிமொழி வழங்கப்பட்டது.

மாலை 6.30மணி முதல் 8.00 மணிவரை இடம்பெற்ற இச் சந்திப்பின்போது பேசப்பட்ட விடயங்கள் குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் விடுத்துள்ள அறிக்கையில்,

* சமாதானப் பேச்சுவார்த்தை விடுதலைப்புலிகளுடன் மட்டும் தான் நடைபெறவேண்டும் என்றும் அதற்குரிய பூரணமான விளக்கத்தையும் கொடுத்தேன். விடுதலைப் புலிகளுக்கு ஏற்புடையதாக அமையும் தீர்வு, தமிழ் மக்களுக்கு ஏற்புடையதாகவே இருக்கும் என்பதையும் வலியுறுத்தினேன். அதில் உள்ள நியாயங்களை ஜனாதிபதி புரிந்துகொண்டார்.

* இந்தியாவுடன் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் இராணுவம், பாதுகாப்பு ஒப்பந்த முயற்சி, இன்றைய நிலையில் சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்லத் தடையாக இருக்கும் என மக்கள் கருதுவதையும், தடைப்பட்டுள்ள பேச்சுவார்த்தைக்கு மேலும் ஒரு பின்னடைவு ஏற்படுவதாக அமையும் என்பதையும் எடுத்துக் கூறியபோது இது சம்பந்தமாக தான் பரிசீலிப்பதாக உறுதியளித்தார்.

* உயர் பாதுகாப்பு வலயம் சம்பந்தமான உடன் நடவடிக்கையாக கிராமங்களின் மத்தியில் உள்ள பாதுகாப்பு வலயங்கள் இராணுவ முகாம்களை நீக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும், ஏனைய பகுதிகளில் உள்ள பாதுகாப்பு வலயங்கள் சம்பந்தமாக விடுதலைப்புலிகளுடன் பேசி ஒரு இணக்கப்பாட்டிற்கு வரும்படியும் வற்புறுத்திக் கேட்டுக் கொண்டதற்கு அத்தகைய முகாம்களின் விபரங்களை தனக்குத் தரும்படியும் உரிய அதிகாரிகளுடன் பேசி நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்தார்.

* போதிய காரணம் இன்றி தொடர்ந்தும் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் இளைஞர்களை வருகின்ற சுதந்திரதினமான பெப்ரவரி 4ஆம் திகதி பொது மன்னிப்புடன் கூடிய விடுதலையை அளிக்குமாறு கேட்டுக்கொண்டேன் அதற்கு அவர் காலம் போதாது எனவும் மிக விரைவில் இது சம்பந்தமான விபரங்களைத் திரட்டி உடன் நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதி அளித்தார்.

* சமாதான முயற்சியில் அரசாங்கத்துடன் சேர்ந்து ஒத்துழைத்துத் தற்போது தடைப்பட்டிருக்கும் பேச்சுவார்த்தையை விரைவில் மீண்டும் ஆரம்பித்து இனப்பிரச்சினையில் ஆக்கபூர்வமான ஒத்துழைப்பை வழங்கவேண்டும் என ஜனாதிபதியிடம் மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக்கொண்டேன் என குறிப்பிடப்பட்டுள்ளது.

(உ)

## சமுர்த்தி வங்கியாளர் பரீட்சை முடிவுகள் தாமதம்

(ஊர்காவற்றுறை)

இலங்கை சமுர்த்தி அதிகார சபையினால் யாழ்.மாவட்டத்தில் நடத்தப்பட்ட இரண்டாவது தொகுதி வங்கியாளர்களுக்கான பரீட்சை இடம்பெற்று ஒரு வருடமாகியும் முடிவுகள் இன்னமும் வெளியாகவில்லை.

இப்பரீட்சைக்கு பின்பு இடம்பெற்ற மூன்றாவது தொகுதி வங்கியாளர் பரீட்சை முடிவுகள் வெளிவந்துள்ள நிலையிலும் இரண்டாவது தொகுதி பரீட்சை முடிவுகள் வெளிவரவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள சமுர்த்தி வங்கிகளில் கடமையாற்றுவதற்கான உத்தியோகத்தர்கள் தெரிவு மூன்று தொகுதிகளாக இடம்பெற்ற மேற்படி வங்கியாளர்களுக்கான பரீட்சை முடிவுகளின் அடிப்படையிலேயே இடம்பெறவுள்ளதாகத் தெரியவருகின்றது.

இதேவேளை, இரண்டு தொகுதிகளுக்கான பரீட்சை முடிவுகள் மட்டுமே வெளிந்த நிலையில் வங்கிக்குரிய உத்தியோகத்தரை நியமிக்க முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பரீட்சை முடிவுகளின் படி தெரிவு செய்யப்படவுள்ள வங்கியாளர்களுக்கே விரைவில் கடன் தொடர்பான பயிற்சி ஒன்று வழங்கப்படவிருப்பது குறிப்பிடத்தக்கது.

(உ-75)

## திலக் மாரப்பனவின் அதிகாரம் சட்டமா அதிபரால் வரையறை

(கொழும்பு)

ரயில்வே அதிகார சபைச் சட்டத்தை செயற்படுத்தவோ அல்லது அதனை வலுவற்றதாக மாற்றவோ போக்குவரத்து அமைச்சர் திலக் மாரப்பனவிற்கு அதிகாரம் இல்லையென சட்டமா அதிபர் கமலசபேசன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் சட்டத்தின் ஊடாகவே ரயில்வே அதிகாரசபை சட்டத்தை அமுல்படுத்தமுடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, ரயில்வே அதிகாரசபை கலைக்கப்படும் வரை தாம் கடமைகளை பகிஸ்கரிக்கப் போவதாக ரயில்வே தொழிற் சங்க அமைப்புக்கள் அறிவித்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

(உ-10)

## ஒட்டுமொத்த ஒத்துழைப்புடன் இந்திய அணியை வெல்ல முடியும்

### பாக்.வேகப்பந்து வீச்சாளர் அக்தர்

(பாகிஸ்தான்)

இந்திய அணிக்கு எதிரான கிரிக்கெற் போட்டித்தொடரை வெல்வதற்குத் தமது குழு அணியினது ஒத்துழைப்பும் அவசியம் என பாகிஸ்தான் அணியின் புயல் வேகப்பந்து வீச்சாளர் சொஹிப் அக்தர் தெரிவித்துள்ளார்.

இந்திய அணிக்கு எதிரான கிரிக்கெற் போட்டித் தொடர்களை வெல்வதற்கு அக்தரின் பங்களிப்பு மிக அவசியம் என பாகிஸ்தானிய அணியின் முன்னாள் தலைவர் இம்ரான்கான் தெரிவித்திருந்தார்.

இதுபற்றிக் கருத்துத் தெரிவித்தபோதே அக்தர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில், இந்திய அணியை போட்டிகளில் வெல்வது உண்மையிலேயே ஒரு சவாலான விடயம்.

இச் சவாலை எதிர்கொண்டு வெற்றிபெறுவது என்பது அணியில் உள்ள எல்லோருடைய ஒத்துழைப்பிலேயே தங்கியுள்ளது.

இப் போட்டித் தொடர்களில் எனக்கு 10ஓவர்கள் மட்டுமே தரப்படும். அதில் என்னால் முடிந்த அளவு பங்களிப்பை செய்ய நான் தயாராகவே இருக்கிறேன்.

எனக்கும் எமது அணித்தலைவருக்கும் இடையே முரண்பாடுகள் உள்ளதாக வெளியாகும் தகவல்களில் உண்மை எதுவும் இல்லை. கடந்த 7வருடங்களாக எமக்கிடையே நெருங்கிய நட்பு விலகி வருகிறது என்றார்.

(உ-4)

## ஸ்ரீ.சு.க.-ஜே.வி.பி.கூட்டு வரவேற்கத்தக்க விடயம்

### பொதுச்சபைக் கூட்டத்தில் டக்ளஸ்

(கொழும்பு)

இலங்கையின் தேசிய இனப் பிரச்சனைக்கு அரசியல் பேச்சுவார்த்தைகள் மூலமே தீர்வு காணப்படவேண்டும். இத்தகைய அரசியல் பேச்சுக்களில் சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்க வேண்டும். இது சுதந்திரக் கட்சிக்கும், மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையே காணப்பட்டுள்ள உடன்படிக்கையில் காணப்படும் ஒரு அம்சமாகும்.

இதனால் இவ் உடன்பாட்டை நாம் வரவேற்பது பொருத்தமாகும். இவ்வாறு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கட்சியின் பொதுச்சபைக் கூட்டம் அண்மையில் இடம்பெற்ற போது அதில் உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில்,

இந்த இரு கட்சிகளும் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் இனப் பிரச்சினையையும் புலிகளின் பிரச்சினையையும் தனித்தனியாக இனம் கண்டுள்ளன. சுதந்திரக் கட்சியினர் அதிகாரங்களைப் பகிர்ந்து அளிப்பதன் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் இலக்கை வெளிப்படுத்தியுள்ளனர்.

ஆனால், மக்கள் விடுதலை முன்னணியினர் அதிகாரப்பரவலாக்கம் என்பதை வலியுறுத்த முற்படுகின்றனர். எனினும், மத்தியில் கூட்டாட்சியுடன் மாநில சுயாட்சி காண்பதே ஈ.பி.டி.பியினராகிய எமது நிலைப்பாடு இதனை வலியுறுத்தும் வகையிலும், தமிழ் மக்களின் தேசிய அபிலாஷைகளை வெளிப்படுத்தும் வகையிலும் எமது செயற்பாடுகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என்றார்.

அத்துடன், சுதந்திரக் கட்சியும் மக்கள் விடுதலை முன்னணியும் செய்துகொண்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் காணப்படும் 5அம்சங்கள் குறித்தும் எடுத்துரைத்ததுடன், உள்ளூர் பொருளாதார விருத்திக்கான ஊக்குவிப்புக்கள், கலாசாரம் தொடர்பான விடயங்கள், ஜனநாயகக் கொள்கை என்பன தொடர்பாகவும் அவர் விரிவாக விளக்கம் அளித்துள்ளார்.

மேலும் தமிழ்பேசும் மக்களின் அரசியல் கட்சி என்ற வகையில், தமிழ் பேசும் மக்களின் உணர்வுகளை பிரதிபலித்து தேசியக் கட்சிகளுடன் நல்லுறவைக் கட்டி வளர்க்கத் தொடர்ந்து பாடுபடுவது என்றும், புலிகளின் அராஜகப் போக்கின் காரணமாக தமிழ் பேசும் மக்கள் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் தொடர்ந்து அனுபவித்துவரும் துன்ப துயரங்களை அம்பலப்படுத்தும் செயற்பாடுகளை முன்னெடுப்பது என்றும் இக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(உ)

## பால்மா பைக்கற்றுகளின் விலை 5 ரூபாவால் குறைக்கப்பட்டது

(கொழும்பு)


மாகாணசபை தேர்தல்கள் நடைபெறவிருக்கும் வேளையில், அரசாங்கம் அத்தியாவசியப் பொருட்கள் மீதான விலைக்குறைப்பை அறிவித்துள்ளது. இதன்படி பால்மா, வெங்காயம், உருளைக்கிழங்கு, செத்தல் மிளகாய், ரின்மீன், கருவாடு ஆகியவற்றில் இவ் விலைக் குறைப்பு இடம்பெறவுள்ளது. இதேவேளை கோதுமை, உரம் ஆகியன உலக சந்தையில் ஏற்பட்ட அதிகரிப்பு காரணமாக தற்போதுள்ள விலைகளிலேயே தொடர்ந்தும் இருக்கும். பொதுமக்களிடையே ஏற்பட்ட வாழ்க்கைச் செலவு அதிகரிப்பைக் குறைக்கவே விலைக்குறைப்பு மேற்கொள்ளப்படுகிறது என நிதியமைச்சர் கூறினார். புதிய விலைகளைக் கடந்த புதனன்று அரசாங்கம் அமைச்சரவையில் அறிவித்திருந்தது. இதன்படி முழு ஆடைப் பால்மா 400கிராம் பக்கெற் ரூபா 5ஆலும், பெரிய வெங்காயம் ஒரு கிலோ ரூபா 6ஆலும், உருளைக் கிழங்கு ஒரு கிலோ ரூபா 2ஆலும் கருவாடு ஒரு கிலோ ரூபா 3 ஆலும், ரின் மீன் 425 கிராம் ரூபா 2ஆலும் குறைக்கப்படவுள்ளன. தற்போது சர்வதேச அளவில் அதிகரித்துள்ள கோதுமை விலை காரணமாக இவற்றின் சுமையை சுங்கத்தீர்வையில் குறைக்க அரசு முடிவெடுத்துள்ளது.

கோதுமைமா 26ரூபா ஆகவும் பிறிமா பச்சைமா 21ரூபா ஆகவும் யூரியா ஒரு பை 800ரூபா ஆகவும் உள்ளமை உணவுப் பொருட்களுக்கான விலை உயர்வு, ஐரோப்பிய நாடுகளில் நிலவும் குளிர் கால நிலையால் எண்ணை விலையில் ஏற்பட்ட அதிகரிப்புக் காரணமாகவே ஏற்பட்டது என நிதியமைச்சர் சொக்ஸி கூறினார்.

(த-6)



# காரைநகர் வாரிவளவு கற...
# மஹா கும்பாபிஷேக சிறப்...



ஆலயத்தின் அழகுமிகு தோற்றம்

## நல்லை ஆதீன முதல்வரின் அருளாசிச் செய்தி



விநாயகர் அடியார்களே காரை நகர் வாரிவளவுப் பதியில் எழுந்தருளி யிருந்து அருளாட்சி புரியும் விநாயகப் பெருமானுக்கு இன்று மஹாகும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம். இலங்கைத் திருநாட்டில் சைவமும் தமிழும் வளம்பெற்றிருக்கும் யாழ்ப்பாணம் காரைநகர்ப் பூமியில் நான்கு வாசல்களுக்கும் இராஜகோபுரம் கொண்ட ஆலயமாக விநாயகரின் ஆலயம் விளங்குவது சிறப்பிற்குரியது. இவ்வாலயத்தில் வேண்டுவார் வேண்டுவதை ஈயும் பொருட்டு விநாயகப்பெருமான் எழுந்தருளியிருந்து வரமருளிக்கொண்டிருக்கின்றார்.

மனித வாழ்வை மேன்மையடையச் செய்வது இறைவழிபாடு எங்கும் பரந்து விரிந்து இருக்கும் இறைவன் ஆலயங்களில் பிரசன்னமாகி அருட்காட்சியளிக்கின்றார். இதனால் எம்சமயத்தில் ஆலயவழிபாட்டை முதன்மைப் படுத்தி கிராமங்கள், நகரங்கள் தோறும் ஆலயத்தை அமைத்தனர்.

விநாயக வழிபாடு எம் சமயத்தில் மிக முக்கிய இடத்தைப் பெறுகின்றது. நம்வாழ்வில் ஏற்படும் விக்கினங்களை நீக்கி நற்கதி தருவது விநாயக வழிபாடு. இக்கும்பாபிஷேகத்தில் அனைவரும் கலந்து விநாயகரின் அருளைப்பெறுவோமாக. ஆலயத்திருப்பணியைச் சிறப்பாகச் செய்யும் ஆலயபரிபாலனசபையினருக்கும் சிவாச்சாரியார்களுக்கும், காரைநகர்வாழ் மக்களுக்கும் இறைவனுடைய ஆசி கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

நல்லை ஆதீனம், நல்லூர்.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்
நல்லை ஆதீன முதல்வர்

## திருவாவடு...



...ளுக்கும் இம்மை ம...
நமது வழிபடு க...
திருவடி மலர்களை...

திருவாவடுதுறை ...

## சிவத்தமிழ் அன்னையின் வாழ்த்துச் செய்தி



'வாழைக்கனி பலவின் கனி
மாங்கனி தாஞ்சிறந்த
ஊழைச்சுருள் குழைஅப்பமௌள்
ளுறுண்டை எல்லாம் துருத்தும்
பேழைப் பெரு வயிற்றோடும்
புகுந்தெம் உளம்பிரியான்
வேழத் திருமுகத்து
செக்கர் விநாயகனே'

என்பது கபிலதேவ நாயனாரின் அற்புதப் பாடலாகும். இப்பாடலைத் தமது உள்ளத்திலே இருத்தி வழிபடும் அடியவர்களைக் கொண்டவர் வாரிவளவு விநாயகப் பெருமான் ஆவார். இவ் அற்புத விநாயகனை வழிபடும் பேறு கொண்டவர்கள் வாரிவளவு மக்களாவார். இத்தகைய வழிபாட்டுப் பெருமை மிக்க ஆலயம் இதுவாகும். பக்திச் சிறப்பாலும், பண்பாட்டுப் பெருமையினாலும் சிறப்பு மிக்க இடம் காரைநகர் ஆகும். இவ்வூர் மக்களின் அயராத உழைப்பும் பக்தி மேம்பாடும் காரணமாகவே காரைநகர் மண் சிறப்படைந்தது எனலாம்.

இவர்களிடம் காணப்படும் பக்தி உணர்வை நான் நேரில்கண்டு வியந்திருக்கின்றேன். இப்பக்தியின் விளைவாகவே இன்று வாரிவளவு விநாயகனுக்கு கும்பாபிஷேகப் பெருவிழா நடைபெற இருக்கிறது. இப்புண்ணிய கைங்கரியத்தில் ஈடுபட்ட ஆலய அறங்காவலர்கள், அந்தணப் பெருமக்கள், அடியவர்கள் ஆகியோரை வாழ்த்தி வணங்கி ஆசிகூறி அமைகின்றேன்.

தலைவர், ஸ்ரீதுர்க்காதேவி
தேவஸ்தானம், தெல்லிப்பழை.

கலாநிதி செல்வி
தங்கம்மா அப்பாக்குட்டி
சமாதான நீதிபதி

## பிரதிஷ்டா பிரதம குருவின் ஆசிச் செய்தி



காரைநகர் வாரிவளவு ஸ்ரீ கற்பகவிநாயகர் ஆலயம் சென்ற ஆண்டு பாலஸ்தான கும்பாபிஷேகம் நடைபெற்று தற்பொழுது நான்கு வாயில்களிலும் இராஜகோபுரங்கள் புடைசூழ புதிதாக அமைக்கப்பெற்று, புதிதாக வடிவமைக்கப்பட்ட அழகிய சுந்தர த்விதள விமானத்தோடு புதுப்பொலிவுதந்து காட்சியளிக்கின்றது. நூற்றாண்டுகள் பழமைவாய்ந்த இவ்வாலயத்தில் கல்பக விருக்ஷமாக விளங்கும் ஸ்ரீ கற்பக விநாயகர் அடியார்கள் வேண்டுவதை வாரி வாரி வழங்கி வருகின்றார். விநாயகப் பெருமானது திருவுளக்கிடக்கையினால் புதிதாக வடிவமைக்கப்பட்ட மண்டப அலங்காரத்தோடு விநாயகரது திருவுருவப் பொலிவுகள் பலவற்றினைத் தாங்கி பக்தர்களுக்கு அருள்பாலித்துக்கொண்டிருக்கின்றார்.

ஆலயத்தை ஜீர்ணோத்தாரணம் செய்வது தர்ம பரிபாலன கர்மாவில் சிறந்தது. கற்பக விநாயகரது திருவருள் கிடக்கையினால் இவ்வாலயத்திற்கு இவ்வாலய நிர்வாகஸ்தரால் மஹா கும்பாபிஷேகம் நடத்தும் பாக்கியம் கிடைக்கப்பெற்றுள்ளது. இத்தெய்வீகப் பணியை இறைவனது கட்டளையாகக் கொண்டு கர்மமே கண்ணாகி வெற்றிகரமாக நடாத்தி முடிவுறச் செய்வதற்கு இத்திருப்பணியில் பொருளுதவி செய்தும், மற்றும் எல்லா வகையிலும் ஈடுபட்ட எல்லா அன்பர்களுக்கும் அஷ்ட ஐஸ்வர்யங்களும், ஆரோக்கிய திடகாத்திரமும் சகல சம்பத்துக்களும் சித்திக்க ஸ்ரீகற்பக விநாயகர் திருவருள் புரிவாராக!

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

சிவாகம கலாநிதி
வேதசிவாகம பிரதிஷ்டா சரஸ்வதி
சிவஸ்ரீ வை.மு.பரமசாமிக் குருக்கள்
உத்தரகோவை

## வாரிவளவில் கும்பாபிஷேகம் வானளாவிய பக்திமயம்

சைவமும் தமிழும் சிறந்து வளரும் காரைநகரின் வாரிவளவு கற்பக விநாயகருக்கு இன்று மஹா கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது. நான்கு பக்கமும் வாயில்கள் அமைத்து பிரதான வாயிலில் இராஜகோபுரமும் ஏனைய மூன்று வாயில்களிலும் தனித்தனிக் கோபுரம் அமைத்து பக்திப் பரவசத்தை ஏற்படுத்தும் கலையம்சங்களுடன் விளங்கும் கற்பக விநாயகருக்கு கும்பாபிஷேகம் இடம்பெறுகின்றது. இதனையிட்டு காரைநகரே விழாக் கோலம் பூண்டுள்ளது.

1880 ஆண்டு மண்கோயிலாக அமைக்கப்பெற்ற இவ்வாலயம் படிப்படியாக சுண்ணாம்புக் கட்டாக கற்கோயிலாக வளர்ச்சி பெற்றது. பல வகைச் செல்வங்களும் கொழிக்கும் காரைநகரில் பல ஆலயங்கள் அமைந்திருந்தாலும் சிறப்பான இராஜகோபுரம் முதன் முதல் அமைக்கப்பட்ட பெருமை இவ் ஆலயத்தையே சாரும்.

முன்னர் 1982.01.31 திகதி இராஜகோபுர கலச கும்பாபிஷேகம் நடைபெற்றது.

நாட்டின் அசாதாரண நிலை காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் குடியமர்ந்த பின்னர் விநாயகருக்கு நவீன கலையம்சங்களுடன் நான்கு கோபுரம் அமைத்து மகிழ்கின்றனர். இலங்கையிலேயே முதன்முதல் நான்கு கோபுரம் கொண்ட பெருமையையும் உடைய இவ் ஆலயத்தின் தேர் தேக்க மரத்திலான சிற்ப வேலைப்பாடுகளைக் கொண்டது. இச் சிற்பங்கள் சமய தத்துவ ஆய்வுகளிற்கு உட்படக்கூடிய வரலாறு கொண்டிருப்பது பெருமைக்குரியதே.

சைவ சமய முறைப்படி ஆகம விதிகளை உள்ளடக்கி புராதன கலையம்சங்களை நவீன முறையில் வடித்துள்ளனர். இதனால் சைவசமய தத்துவங்களைப் பாதுகாத்த பெருமையை இவ்வாலயத்தினர் பெறுவதோடு இதனை இளம் சமுதாயத்தினருக்கு அர்ப்பணித்துள்ளனர். அத்துடன் காரைநகரிலிருந்து பல்கலைக்கழகம் செல்லும் வறிய மாணவர்களுக்குப் புலமைப் பரிசில் திட்டத்தினையும் ஆலயம் நடைமுறைப்படுத்தவுள்ளது. சமயப் பணியுடன் கலைப்பணி மற்றும் சமூகப் பணிகளையும் ஆலயம் செய்வது போற்றுதற்குரியது. இஃது ஈழத்தில் உள்ள ஏனைய ஆலயங்களுக்கு முன்னுதாரணமாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

ஆலயத்தின் கட்டட சிற்பவேலைகளை உள்ளூர் கலைஞர்களும் தென்னிந்திய சிற்பாசாரியார்களும் சிறப்பாக மேற்கொண்டுள்ளனர். வாரிவளவன் வாரி வாரி வழங்கிய செல்வங்களை விநாயகரின் திருப்பணிக்காக அர்ப்பணித்தவர்கள் சரீர உதவிபுரிந்தவர்கள் அனைவரும் அவரின் அருட்கடாட்சத்திற்கு உரியவர்கள். இதனை ஒழுங்குபடுத்தி நெறிப்படுத்திய [illegible]ர்வாகி கால[illegible]ன் கண் போற்றப்பட வேண்டியவர்.

திருப்பணி ஆகிய பெரும் பணியில் ஈடுபட்ட அனைவருக்கும் விநாயகரின் அருள் கிடைக்கப் பிரார்த்திப்போமாக!

**கொம்பன்** வாரிவளவு, காரைநகர்.


**ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பு நிலையம்**
இல. 303 K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
T.P:- 021 222 2670, Fax:- 021 222 3214
E-mail:- del.sms.kr.@Eureka.lk

**திரு முருகன் கொம் நெற்**
இல.46, ஆழியபாதம் வீதி, திருநெல்வேலி
T.P:- 021 222 7310, 021 222 7555, 021 222 7560
Fax:- 021 222 7310
E.mail:- Thirumurugan @ Eudra mail

**கணேசன் ஸ்ரோர்ஸ்**
இல. 201 கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.


**இளவரசி சேலைச்சோலை**
இல. 57, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 222 2503

**சிவகணேசன் ஸ்ரோர்ஸ்**
இல. 41, பெரியகடை,
யாழ்ப்பாணம்.
T.P. 222 2063

**வேல்முரு... அலங்காரக்கும் ...**
113-115, மானிப்பா...
யாழ்ப்பாண...
T.P. 222 5468, 222...

# ...வு கற்பகவிநாயகர் ஆலய

# சிறப்புமலர் - 01.02.2004



## திருவாவடுதுறை ஆதீன சுவாமிகளின் அருள் வாழ்த்துரை




விக்கினங்களைப் போக்கி வெவ்வினையை வேரறுக்கவல்ல விநாயகப் பெருமான் திருவருள் பெருகும் பொருட்டு அருள்மிகு காரைநகர் வாரிவளவு கற்பக விநாயகர் திருக்கோவில் திருக்குடத் திருமஞ்சனப் பெரும் சாந்திப் பெருவிழா சுபானு ஆண்டு தை மாதம் 18 ஆம் நாள் (01.02.2004) சிறப்பாக நடைபெறவுள்ளமை அறிந்து மகிழ்ச்சியடைகிறோம்

இப்பெருவிழாவினைப் பொறுப்பேற்று நடத்தும் ஆலய பரிபாலகர்களுக்கும் துணைநிற்போருக்கும். கலந்துகொண்டு பயன்பெறும் அன்பர்களுக்கும் இம்மை மறுமை வளங்கள் இனிதே கைகூடிச் சிறந்திட நமது வழிபடு கடவுளாகிய அருள்மிகு ஞானப் பெருங்கூத்தன் திருவடி மலர்களைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

'வேண்டும் இன்ப அன்பு'

திருவாவடுதுறை ஆதீனம்

23வது குருமகா சன்னிதானம்
சீர்வளசீர் சிவப்பிரகாச
தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்







புதிதாக நிர்மாணிக்கப்பட்ட மூன்று இராஜகோபுரங்கள்

## ...பாபிஷேகம் ...க்திமயம்

...ரிவளவு கற்பக விநாயகருக்கு இன்று ...யில்கள் அமைத்து பிரதான வாயிலில் ...கோபுரம் அமைத்து பக்திப் பரவசத்தை ...கு கும்பாபிஷேகம் இடம்பெறுகின்றது.

...ம் படிப்படியாக சுண்ணாம்புக் கட்டாக ...ாழிக்கும் காரைநகரில் பல ஆலயங்கள் ...க்கப்பட்ட பெருமை இவ் ஆலயத்தையே ...

...் நடைபெற்றது.

...மக்கள் மீண்டும் குடியமர்ந்த பின்னர் ...த்து மகிழ்கின்றனர். இலங்கையிலேயே ...் ஆலயத்தின் தேர் தேக்க மரத்திலான ...த்துவ ஆய்வுகளிற்கு உட்படக்கூடிய ...

...ன கலையம்சங்களை நவீன முறையில் ...ாத்த பெருமையை இவ்வாலயத்தினர் ...ளனர். அத்துடன் காரைநகரிலிருந்து ... பரிசில் திட்டத்தினையும் ஆலயம் ...சமூகப் பணிகளையும் ஆலயம் செய்வது ...ளுக்கு முன்னுதாரணமாக விளங்கும் ...

...களும் தென்னிந்திய சிற்பாசாரியார்க ...வழங்கிய செல்வங்களை விநாயகரின் ...ர்கள் அனைவரும் அவரின் அருட் ...படுத்திய ...ர்வாகி கால...ன் கண் ...

...க்கு ... வ ...

...தும் விநாயகரின் அருள் கிடைக்கப் ...

...ன் வாரிவளவு, காரைநகர்.

## ஆலய பிரதமகுருவின் ஆசிச்செய்தி



சகல புவனங்களையும் அருளாட்சி புரிந்து ஆன்மாக்களுக்கு ஏற்படுகின்ற விக்கினங்களை நீக்கிப் பேரருள் புரியும் கருணாகரமூர்த்தியாம் ஸ்ரீ கற்பகவிநாயகப் பெருமானது பாதார விந்தங்களை முதற்கண் வணங்குகின்றேன்.

ஜீவ - ப்ரம்ம ஐக்கியத்தை உணர்த்தும் வடிவம் கணபதியின் வடிவமாகும். கழுத்துவரை மனிதரூபமும் அதற்குமேல் யானை முகமும் கொண்டிருக்கும் கணபதியின் திருவுருவமானது மனித வடிவத்தில் ஜீவாத்மாவையும், கஜரூபத்தில் பிரம்மஸ்வரூபத்தையும் உணர்த்தி, இரண்டும் இணைந்த ஓர் அற்புத நிலையில் காட்சியளிக்கின்றார்.

எனவே கணபதியின் திவ்விய வடிவம் ஜீவப்பிரம்ம ஐக்கியத்தை எமக்கு எடுத்துக்காட்டுகின்றது. இதேபோன்று விநாயப் பெருமானது பெருமையை எடுத்துக் கூறிக்கொண்டே இருக்கலாம். முடிவில்லாத தத்துவங்களைக் கொண்டவர் விநாயகப் பெருமான்.

அந்தவகையில் திருநகராம் காரைநகரில் வாரிவளவு என்னும் திருப்பதியில் சுந்தரரூபனாக வீற்றிருக்கும் ஸ்ரீ கற்பகவிநாயகப்பெருமானின் குடமுழுக்கு விழாவை தரிசித்த அறங்காவலர்கள் மற்றும் சகல பக்தகோடிப் பெருமக்களுக்கும் ஸ்ரீ கற்பகவிநாயகப் பெருமானின் திருவருள் பரிபூரணமாகக் கிடைக்கவேண்டும் என எனது மனப்பூர்வமான நல்லாசிகளைக் கூறுகின்றேன்.

''சர்வே ஜனஹா ஸுஹினோ பவந்து''

நா.ஹரீந்திரக்குருக்கள்

## யாழ். வலயக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச்செய்தி



மழலை வயதில் விரல்களுக்குள் நுழைந்து தமிழ் மொழியின் அகரத்தை எழுத வைத்த கற்பக விநாயகர் இளமையும் எழிலும் நிறைந்தவர். பாடசாலைக் காலத்தில் தோப்புக்கரணம் போட்டவர்களுக்குக் கல்வியை அள்ளிக் கொட்டினார். பதவிகள், உயர்வுகள், பரிசுகள் அளித்தார். முதுமை நெருங்கும் காலத்தில் குட்டுப்போட்டவர்களுக்குப் பொற்காசுகளை அள்ளி வழங்கினார். கலியுகத்தில் இந்தக் காட்சிகளை மௌன நிலைக்குள் விழிகள் மூடும் நேரத்தில் தரிசனம் செய்யலாம்.

இந்துசமயத்தின் உச்சநெறிகளைக் காரைநகர் அச்சொட்டாக பின்பற்றுவதனால் இன்று காரைநகர் தெய்வங்களின் அருளால் தேசத்திலே நிமிர்ந்து நிற்கின்றது.

கற்பகப்பிள்ளையார் ஆலயம் அர்ச்சகர்களால், சிற்பிகளால், அடியார்களால் தோகையில்போல் வண்ணமாய்க் காட்சியளிக்கின்றது. வானில் பறக்கின்ற குருவிகள்கூட ஓம் என்ற பிரணவ ஒலியை உச்சரித்தே பறக்கின்றன.

அள்ள அள்ளக் குறையாமல் அருள்வழங்கும் கற்பகப் பிள்ளையார் உள்ளத்தில் நுழைந்துவிட்டால் உலகமே காலடியில் கிடக்கும். வாழ்வின் தேடல்களில் வெற்றியும், நாட்டின் செழுமையில் அமைதியும், கற்பகப்பிள்ளையாரைக் கைதொழுது தோப்புக்கரணம் போட்டால் கிடைக்கும்.

இன்றைய மகாகும்பாபிஷேகம், கிரியாசக்திகளுடன், இந்து தர்மத்தின் அற்புதங்களை, உலகிற்கு வெளிக்கொண்டு வரல்வேண்டும். அர்த்தமுள்ள இந்துமதம் காரைநகர் வாரிவளவு கற்பகவிநாயகரால் பட்சமுடன் வாழ்த்தப்படல்வேண்டும்.

ப. விக்னேஸ்வரன்
வலயக்கல்விப்பணிப்பாளர்

வலயக்கல்வி அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

## தேவஸ்தான நிர்வாகஸ்தரின் உள்ளத்தில் இருந்து....

ஈழத்தின் தலைசிறந்த ஆலயமாக விளங்கும் வாரிவளவு கற்பக விநாயகர் ஆலயத்தில் இன்று கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். இப் பாரிய திருப்பணிக்கு விநாயகப் பெருமானின் திருவருளுடன் அருட்செல்வம் உடையோர் அனைவரும் பொருட் செல்வத்தை அள்ளித்தந்தார்கள்.

ஆலயத்தில் ஈடுபாடு உடையவர்கள் யாவரும் சரீர உதவி செய்தார்கள். இதனால் இப்பெரும் திருப்பணி குறுகிய காலத்தில் இனிதே நிறைவெய்தியது.

தலை சிறந்த மூத்த சிவாச்சாரியார்கள் அவர்களின் தலைமையில் பல சிவாச்சாரியார்கள், அந்தணப் பெரியோர்கள் கூடி இன்று நடாத்தவிருக்கும் கும்பாபிஷேகத்திற்கு அனைவரும் வருகைதந்து விநாயகப் பெருமானின் அருட்செல்வத்தை பெற்றுய்யுமாறுவேண்டி கற்பக விநாயகனை வணங்கி நிற்கின்றேன்.

தேவஸ்தான நிர்வாகஸ்தர்
கற்பக விநாயகர் ஆலயம், வாரிவளவு, காரைநகர்.

## கற்பக விநாயகா காப்பாய்



நலந்தரு காரை நகரிலே ஓங்கும்
ஞானமார் சாரி வளவிலே மேவும்
தலந்தரு கற்பக விநாயக மூர்த்தியே
தவமிகு மடியார் சாஸ்திர விதியில்
அமைத்தபொற் கோயில் அமர்ந்து, சுபானு
அணிதரு தையில் ஆதிவா ரத்தில்
நிமிர்ந்தமா ரோகிணி நிறைந்தநன் நாளில்
நிகழ்த்திய குடமுழுக் கேற்ற கணேசா,
செந்தமிழ் சிறக்க, சிவராசிகள் நற்
செழிப்புடன் வாழ, திகழ்வளம் சிறக்க,
வந்ததம் மக்கள் சமாதானமாக
சஞ்சலமின்றிச் சமரசம்பேண,
கொடுமைகள் நீங்க குலமும் சிவநெறிக்
கொள்கைகள் மலர, கோவிலும் வாழ
அடியவர்க்கெல்லாம் அருள்வரம் நல்கி
அப்பா விநாயகா, காப்பாய் போற்றி.

அருட்கவி சீ. விநாசித்தம்பி M.A

## சிவத்தமிழ் வித்தகரின் வாழ்த்துச் செய்தி



கருணையின் திருவடிவமானதும், ஞானத்தின் இருப்பிடமாகிய விநாயகரை நாம் முதலில் வழிபடவேண்டும். காரைநகர்க் கிராமத்தில் வாரிவளவும் பகுதியிலே இருந்து விநாயகப் பெருமான் அருளாட்சி செய்கின்றார். மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூவகைச் சிறப்புக்களையும் உடைய இக்கோயில் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு பெரும் சாந்தி என்று அழைக்கப்படுகின்ற மகாகும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெறுகின்றது

இயற்கைச் சூழலில் அமைந்திருந்த விநாயகப் பெருமானின் சந்நிதானத்தினைப் புனருத்தாரணம் செய்து மஹாகும்பாபிஷேகத்தினை நடாத்தும் அடியவர்கள் யாவருக்கும் சகல செல்வயோகம் மிக்கபெருவாழ்வு கிடைக்க விநாயகப்பெருமானின் திருவருளைப் பிரார்த்திக்கின்றேன்.

சிவத்தமிழ் வித்தகர்
சிவ. மகாலிங்கம்


...நெற்
...வேலி

இ. ச. பேரம்பலம் அன் கோ
இல. 50, 52 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

கஜமுகன் காட்வெயர்ஸ்
147, 149 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

வேல்முருகன் அலங்கார ஆலை
113-115, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. 222 5468, 222 2668

அற்புதா ரேடிங் கம்பனி
இல. 198 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

மகாராணி பட்டுச்சோலை
50, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

சிமாட்டி புடைவைக்கடல்
இல. 122 மணிக்கூட்டு
வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 222 2196

குகன் ஸ்ரோர்ஸ்
160, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. 222 2760

## சமாதான நீதவானாக நியமனம்

(யாழ்ப்பாணம்)

கல்வயல் சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும்ஆஸ்பத்திரிவீதி யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற கால்நடை



போதனாசிரியர் ஆர்.வீ. கந்தசுவாமி, யாழ்.மாவட்ட சமாதான நீதவானாக யாழ்.நீதிமன்ற நீதிபதி ஆர்.ரி. விக்னராஜா முன்னிலையில் அண்மையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் பழைய மாணவரான இவர், உலக சைவப்பேரவை இலங்கைக்கிளையின் ஆயுட்கால அங்கத்தவராகவும் இலங்கை செஞ்சிலுவைச்சங்க யாழ்.கிளையின் அங்கத்தவராகவும் யாழ்.ப.நோ.கூ. சங்க பொதுச்சபை மற்றும் உபசபை உறுப்பினராகவும் யாழ். மேல் நீதிமன்ற யூரராகவும் பணிபுரிகிறார்.

## சுகாதார சேவை ஊழியர்கள் 48 மணிநேர காலக்கெடு

(கொழும்பு)

சுகாதார சேவை ஊழியர்கள் 48 மணிநேர கால அவகாசத்தை அரசாங்கத்திற்கு விதித்துள்ளனர்.

சுகாதார சேவை ஊழியர்களின் சம்பள அதிகரிப்பை ஒரே தடவையில் அரசு வழங்க வேண்டும் என்ற கோரிக்கைக்கு சம்பள உயர்வின் 60 சதவீதத்தை கடந்த ஜனவரி மாதத்தில் இருந்து வழங்குவதென்றும்,15 சதவீதத்தை வருடத்தின் நடுப்பகுதியில் இருந்து வழங்குவதென்றும் அரசாங்கம் உறுதி வழங்கியுள்ளது.

மேற்படி உறுதிமொழியை சுற்றுநிருபம் மூலம் அரசாங்கம் வழங்கத்தவறினால், தற்போது ஆரம்பிக்கப்படடுள்ள உண்ணாவிரதப்போராட்டம் நாடளாவிய ரீதியில் விஸ்தரிக்கப்படும் என சுகாதாரசேவை ஊழியர் தொழிற் சங்கக் கூட்டமைப்பின் தலைவர் சமன்ரத்னப்பிரிய தெரிவித்துள்ளார். (தி-66)

## இலங்கை-ரஷ்ய பாதுகாப்பு ஒப்பந்தம் கைச்சாத்து

(மொஸ்கோ)

இராணுவ தொழில்நுட்ப உடன்படிக்கை ஒன்றில் இலங்கை அரசும் ரஷ்யாவும் கைச்சாத்திட்டுள்ளன.

இந்த உடன்படிக்கையில் இலங்கை அரசின் சார்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் ரஷ்யாவின் சார்பில் அதன் பிரதிப் பாதுகாப்பு அமைச்சரும் கைச்சாத்திட்டுள்ளனர்.

இந்த உடன்படிக்கையின் பிரகாரம் இலங்கை இராணுவத்தினருக்கான பயிற்சிகளை ரஷ்ய இராணுவ உயர் அதிகாரிகள் அளிக்கவுள்ளனர். அத்துடன் இராணுவ தளபாட உதவிகளையும் இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மாதம் ரஷ்ய இராணுவ அதிகாரிகளைக் கொண்ட குழுவினர் இலங்கைக்கு வருகை தந்தபோது அக் குழுவினர் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்து ஒரு வாரகாலம் தங்கியிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

### மாகாண சபைகள் தொடர்பான

## ஜனாதிபதியின் மனுவுக்கு உயர் நீதிமன்றம் பதில்

(கொழும்பு)

மாகாண சபைகள் திருத்தச் சட்ட மூலம் அரசியல் யாப்பிற்கு அமைவானதா? என்ற கேள்விக்கான பதிலை உயர் நீதிமன்றம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும், சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேராவுக்கும் அனுப்பி வைத்துள்ளது.

மாகாண சபை உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிப் பதற்கும் அனைத்து மாகாண சபைகளுக்குமான தேர்தல்களை ஒரேதினத்தில் நடத்துவதற்கும் வழிவகுக்கும் நோக்கில் அமைச்சரவையின் ஊடாக மாகாண சபைகள் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்வது அரசியல் யாப்பில் கூறபபட்டுள்ள விதிமுறைகளுக்கு உட்பட்ட வையா? என்பதைத் தனக்குத் தெளிவுபடுத்துமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கடந்த வியாழக்கிழமை உயர்நீதி மன்றத்தைக் கேட்டிருந்தார்.

இதற்கமைய பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தலைமையிலீான 3 அங்கத்தவர்கள் கொண்ட நீதியரசர்கள் குழு, மாகாண சபைகள் திருத்தச்சட்ட மூலத்தின் உத்தேச திருத்தங்களை நேற்று ஆராய்ந்து அதற்கான பதிலை அனுபி வைத்துள்ளது. (60,10)

## கிராமங்களை இணைக்க கோரிக்கை

(திருகோணமலை)

திருகோணமலை மூதூர் பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட உப்பூறல், சீனன்வெளி ஆகிய இரு தமிழ்க் கிராமங்களை வெருகல் ஈச்சிலம்பற்று உதவி அரச அதிபர் பணிமனையுடன் இணைக்க நடவடிக்கை எடுக்குமாறு திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபரிடம் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச்செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான இரா சம்பந்தன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இவ்விரு கிராமங்களையும் சிங்கள மக்கள் கூடுதலாக வாழ்கின்ற சேருவில கிராமத்துடன் இணைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.


இதனால் இத்திட்டத்தை கைவிடுமாறு அவர் அரசாங்க அதிபரிடம் கடிதமுலம் கோரிக்கை விடுத்துளளார்.

உப்பூறல், சீனன்வெளி ஆகிய இரு கிராமங்களிலும் 185 தமிழ்க் குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

அத்துடன் இவ்விரு கிராம மக்களும் இனம்,மொழி,கலாசாரம் போன்றவற்றால் ஒன்றுபட்டுள்ளதால் இக்குடும்பங்களை வெருகல் ஈச்சிலப்பற்று உதவி அரச அதிபர் பணிமனையுடன் இணைப்பதே பொருத்தமானது என அக்கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (தி-61)

## இசைக்கச்சேரி

(யாழ்ப்பாணம்)



காரைநகர் வாரிவளவு ஸ்ரீகற்பக விநாயகர் தேவஸ்தான மஹா கும்பாபிஷேக தினமாகிய இன்று இரவு 8.00மணிக்கு ஆலய முன்றலில் இசைச்சக்கரவர்த்தி டாக்டர் ரி.எம். சௌந்தர ராஜனின் புதல்வர் இசைக்கலாமணி ரி.எம். எஸ். பால்ராஜின் இசைக்கச்சேரி இடம்பெறவுள்ளது. (உ)

## நேர்முகப் பரீட்சை ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

தீவக வலயத்திற்கான அதிபர், ஆசிரிய ஆலோசகர் பதவிக்கு நாளை 2ஆம் திகதி நடை பெறவிருந்த நேர்முகப்பரீட்சை பிற்போடப்பட்டுள்ளதாக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் வி.ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

நேர்முகப் பரீட்சை நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் அவர்தெரிவித்தார். (ச)





கச்சாய் தெற்குப்பகுதியில் அமைந்துள்ள அரியாலை பிட்டி இந்து மயானம், பொதுமக்களின் பாவனைக்கு அனுமதிக்கப்பட்டதையடுத்து, அதற்குச் செல்லும் பாதையினை 52வது படைப் பிரிவைச்சேர்ந்த படைவீரர்கள் சிரமாதானம் மூலம் செப்பனிட்டனர்.



யாழ். மத்திய கல்லூரி விளையாட்டுப்போட்டி நிகழ்வின் ஓர் அங்கமாக கடந்த வெள்ளியன்று சாட்டிக் கடலில் நடாத்தப்பட்ட படகோட்டல் போட்டியில் கலந்துகொண்ட மாணவர்களையும்,



அப்போட்டிக்கான நடுவர்கள், கல்லூரி அதிபர், சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் அதிகாரிகள் மற்றும் சுழியோடிகள் ஆகியோர் ஓர் படகில் செல்வதையும் படங்களில் காணலாம்.



அண்மையில் ஒஸ்மானியாக் கல்லூரியில் ஆரம்பிக்கப்பட்ட அஹதிய்யா சன்மார்க்க போதனா பீடத்தில் இணைந்து கொண்ட மாணவர்களையும் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள் ஆகியோரையும் படத்தில் காணலாம். (படம்:எஸ். சாந்ததேவன்.)

## வேலை நிறுத்தத்தில் ஈடுபடும் ரயில்வே ஊழியர்களை இராணுவம் அழைத்துச் செல்கிறது

(கொழும்பு)

வேலை நிறுத்தத்தில் ஈடுபடும் ரயில்வே ஊழியர்கள் இராணுவத்தினரால் கட்டாயத்தின் பேரில் பணிக்கு அழைத்துச் செல்லப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தனியார் மயப்படுத்தப்பட்டுள்ள ரயில்வேத் துறையை திணைக்களமாக மாற்றுமாறும் சம்பள அதிகரிப்புக் கோரியும் ரயில்வே ஊழியர்கள் மேற்கொண்டுவரும் வேலை நிறுத்தத்தால் ரயில்வே போக்குவரத்துக்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

ரயில்வே போக்குவரத்துச் சேவையை மீண்டும் வழமைக்குக் கொண்டுவரும் முகமாக ரயில்வேத்துறை ஊழியர்கள் இராணுவத்தினரால் வீடுவீடாகச் சென்று அழைத்துச் செல்லப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, 26 ரயில்கள் நேற்று முன்தினம் சேவையில் ஈடுபடுத்தப்பட்டதாக ரயில்வே வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (இ)

## சிறு விளம்பரம்

### விற்பனை

சகல விதமான T.V களுக்கு சிறந்த முறையில் அன்ரனா பொருத்திக் கொள்ளவும், திருத்திக் கொள்ளவும் அன்ரனா, பூஸ்ரர், வயர், பைப் செற், அன்ரனா உதிரிப பாகங்கள் பெற்றுக் கொள்ளவும் நாடவேண்டிய ஒரே இடம்: நியூ சிற்றி ரேடேர்ஸ்,135 கஸ்தூரியார் வீதி (குளத்திற்கு முன்பாக) யாழ்ப்பாணம். தொலைபேசி எண்: 222-3226 (C/7313)

### மணமகன் தேவை

செவ்வாய் தோஷமில்லாத 6.5.78 இல் பிறந்துள்ள கிரகபாவம் 2 1/16, 'அஸ்வினி 4ஆம் பாதம் கொண்ட சைவ வேளாள குடிப் பிறபபிலுள்ள பெண்மணிக்கு மண மகன் தேவை. லண்டனில் நிரந்தர வசிப்பிடத் தகைமை கொண்டிருப்பது அவசியம். தற்சமயம் தாயகம் திரும்பி திருமணத்திற்காக நிற்பவரும் பின்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளலாம். திரு. V.A.சிவராசா சோதிடர் இல.01, பழம் றோட்,கந்தர் மடம் யாழ்ப்பாணம். தகவல்கள் தொடர்புகள் இரகசியமாக வைக்கப் படும். திருமணம் செய்துகொள்ள விரும்புவோர் உடன் நாடுங்கள். (8191)


## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

கந்தர்மடம் அரசடிவீதியில் உள்ள செல்வநாகபூசணி அம்பாள் ஆலய கும்பாபிஷேகமும், மண வாளக்கோல திருவிழாவும் திருவூஞ்சல் நிகழ்வும் இன்று ஞாயிற்றுக் கிழமை இடம்பெறவுள்ளது.(உ-8)

## பரிசளிப்பு விழா

(கொழும்புத்துறை)

மாலிப்பாய மகளிர் கல்லூரியின் பரிசளிப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை கல்லூரி மண்டபத்தல் பாடசாலை அதிபர் வி.சண்முகரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ளது. (தி-51)

## மீளக்குடியமர்ந்த மக்கள் சிரமம்

(மல்லாவி)


முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள பாண்டியன்குளப் பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்துள்ளோர் அடிப்படை வசதிகள் எதுவுமற்ற நிலையில் அவலவாழ்க்கை வாழ்ந்து வருகின்றனர்.

ஸ்ரீ லங்கா இராணுவத்தின் 'ரணகோச' இராணுவ நடவடிக்கையின்போது இப்பகுதியை விட்டு இடம்பெயர்ந்த 200 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தற்பொழுது இங்கு மீளக்குடியமர்ந்துள்ளன.

இவ்வாறு குடியமர்ந்தவர்களுக்கு ஏற்றவகையில் சுகாதார மற்றும் வாழ்விட வசதிகள் இல்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (உ-4)

# மற்றவர் மீதான பொறாமையை விடுத்து நமது வல்லமையால் வாழ்வை வெல்வோம்

"விண்ணும் மண்ணும் ஒழிந்து போகும்
என் வார்த்தைகளோ ஒழிந்து போகா"
மாற்கு 13 :31 - 32



வாழ்வு ஒரு பெரும் கொடை! ஒரு தடவைதான் நாம் இவ்வுலகில் இதை வாழ்ந்து முடிக்கலாம். இநத வாழ்வை வளமானதாக வாழ அர்த்தமுள்ள முறையிலும், பலன் மிக்க வகையிலும் கட்டியெழுப்ப இறைவன் பல வளங்களையும் நமக்குத் தருகிறார்.

இயற்கை வளங்கள், அறிவுத் திறன், ஆக்கபூர்வமான கல்வி, பல திறமைகள், போதிய நேரம், அசாதாரணதுணிவும், நம்பிக்கையோடு இறைவார்த்தைகள் இன்னும் எத்தனை எத்தனையோ. ஆனால் இவற்றை நாம் பயன்படுத்துகின்றோமா? மக்களுக்கும் இறைவனுக்கும் நம்பிக்கைக்கு உரியவர்களாக வாழ்கின்றோமா? என எண்ணிப்பார்க்கும் போது நாம் என்றும் இறைவனுக்கும் இறை வார்த்தைகளுக்கும் சவால் விடுகிறவர்களாகவே காணப்படுகின்றோம்.

அவரவர் திறனுக்கேற்ப இறைவன் தருகிறார். மற்றவர்களைக் கண்டு பொறாமைப்படுவதில் பயன் இல்லை. நாம் நமது சொந்த வல்லமையைக் கொண்டு வாழ்வை வென்றெடுப்போம். நாம் இன்று எவ்வளவு சம்பாதித்துள்ளோம் என்பது கேள்வி அல்ல. இறைவன் நமக்குச் செய்த நன்மைத் தனங்களை மறவாது அவரை எவ்வாறு போற்றிப் புகழ்கிறோம் என்பதுவே எமது தாரக மந்திரமாக அமைய வேண்டும். அப்போதுதான் நாம் அந்த விண்ணகத்தை எட்ட முடியும்.

சகோதர சகோதரிகளே! இவை நடக்கும் காலம் எப்போது என யாராலுமே அறிய முடியாது என்பதை விளக்கும் பொருட்டு இயேசு பின்வரும் உவமை மூலம் எமக்கு விளக்குகின்றார்.

"அந்நாளில் விண்ணரசு, மணமகனை எதிர்கொள்ளச் சென்ற பத்துக் கன்னியருக்கு ஒப்பாயிருக்கும். அவர்கள் கையில் விளக்கு எடுத்துப் போனார்கள். அவர்களுள் ஐவர் அறிவிலிகள். ஐவர் விவேகிகள். அறிவிலிகள் ஐவரும் விளக்கு எடுத்துக் கொண்டார்கள் ஆனால் அதை ஏற்றுவதற்கு எண்ணெய் எடுத்துக் கொள்ளவில்லை. விவேகிகளோ விளக்குடன் ஏனத்தில் எண்ணெயும் எடுத்துக் கொண்டார்கள். மணமகன் வரக் காலம் தாழ்த்தவே எல்லாரும் தூங்கி விழுந்து உறங்கி விட்டார்கள்.

நள்ளிரவில் "இதோ! மணவாளன் வருகிறார். அவரை எதிர் கொள்ளச் செல்லுங்கள்" என்ற கூக்குரல் கேட்டது. அப்பொழுது அக்கன்னியர் எல்லோரும் எழுந்து தம் விளக்குகளைச் சரிப்படுத்தினார்கள். அறிவிலிகளோ "எங்கள் விளக்குகள் அணைந்து போகின்றன. உங்கள் எண்ணெயில் எங்களுக்குக் கொஞ்சம் கொடுங்கள்" என்று விவேகிகளிடம் கேட்டார்கள். அதற்கு விவேகிகள் "உங்களுக்கும் எங்களுக்கும் எண்ணெய் பற்றாமல் போகலாம் ஆகவே கடைக்காரரிடம் சென்று நீங்களே வாங்கிக் கொள்ளுங்கள்" என்றனர்.

அவர்கள் எண்ணெய் வாங்கச் செல்லும் போது மணமகன் வந்தார். தயாராய் இருந்தோர் அவருடன் மணவீட்டில் நுழைந்தனர். கதவும் அடைக்கப்பட்டது. இறுதியாக மற்றக்கன்னியர் வந்து "ஆண்டவரே! ஆண்டவரே!! எங்களுக்கு கதவைத் திறந்துவிடும்" என்றனர். அவரோ மறுமொழியாக "உறுதியாக உங்களுக்கு சொல்கிறேன், உங்களை அறியேன்" என்றார். எனவே விழிப்பாய் இருங்கள். ஏனெனில் நாளும் நேரமும் உங்களுத் தெரியாது.

மத்தேயு 25 : 1 -13

## பரமபிதா காட்டிய பாதை

ஆனையூர்
ச.இராசேந்திரம்

எச்சரிக்கையாயிருங்கள், விழிப்பாயிருங்கள் ஏனெனில் அந்நேரம் எப்பொழுது என்று உங்களுக்குத் தெரியாது. அது எப்படியெனில்; வெளியூர் செல்லும் ஒருவன் அவன் தன் வீட்டைவிட்டு புறப்படும் போது ஊழியர்களிடம் எல்லாம் ஒப்படைத்து அவனவன் வேலையையும் குறிப்பிட்டு விழிப்பாய் இருக்கும்படி காவலாளிக்கு கட்டளையிடுகிறான். அதுபோல நீங்களும் விழிப்பாய் இருங்கள். ஏனெனில் வீட்டுத் தலைவர் மாலையிலோ, நள்ளிரவிலோ, கோழி கூவும் பொழுதோ, காலையிலோ எப்பொழுது வருவார் என்று உங்களுக்குத் தெரியாது. அவர் திடீரென்று வரும்போது நீங்கள் உறங்கிக் கொண்டு இருப்பதைக் காணலாகாது.

உங்களுக்குக் கூறுவதை நான் எல்லாருக்குமே கூறுகிறேன் விழிப்பாய் இருங்கள்.

மாற்கு 13 : 33 - 37 □

## முடிவினை மறுபரிசீலனை செய்க!

# ஆறுமுகன் தொண்டமானுக்கு அமைச்சர் சந்திரசேகரன் கடிதம்

(கொழும்பு)

தனிப்பட்ட கட்சி நலன்களை அல்லது கட்சியின் கௌரவத்தை பிரதானப்படுத்தாமல், அனைத்துச் சிறுபான்மை மக்களின் அரசியல் போக்கையும் மனதில் கொண்டு தங்களின் முடிவினை பரிசீலனை செய்யவேண்டும் என மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ.சந்திரசேகரன் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் வீடமைப்பு, தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சருமான ஆறுமுகன் தொண்டமானிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

மலையகக் கட்சிகள் ஒன்றுபடுவதன் அவசியம் குறித்து அமைச்சர் சந்திரசேகரன் தொண்டமானுக்கு எழுதிய கடிதத்துக்கு அனுப்பிவைக்கப்பட்ட பதில் கடிதம் குறித்து அனுப்பப்பட்ட கடிதத திலேயே மேற்கண்டவாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது

அந்தக் கடிதத்தில் மேலும், இந்திய வம்சாவளி மக்கள் பேரணி என்ற அமைப்பு மக்களின் வாக்குகளைப் பெற்று தேர்தலில் வெற்றிபெறுவதை மட்டும் நோக்கமாகக் கொண்டு அமைக்கப்பட்ட கூட்டாக இருந்தால் அதனை ஆதரிக்க முடியாதெனவும், அது மக்களின் வாக்குகளை கொள்ளையடிப்பதற்கான கூட்டாகவே அமையும் எனவும் கருத்துத் தெரிவித்திருந்தோம்.

மலையக மக்களின் எதிர்காலத்திற்கான இந்தக் கூட்டின் அரசியல் நிலைப்பாடு, தொலைநோக்கு, அரசியல் சிந்தனை, அவற்றில் வெற்றியடைவதற்கான வேலைத்திட்டங்கள் போன்ற சகல அம்சங்களிலும் உடன்பாடு காணவேண்டும் என்பதோடு, தேர்தல் வெற்றிகளையும், பதவிகளையும் மையமாகக் கொணடதாகவோ அல்லது ஏனைய அமைப்புக்களை தேவைக்கேற்ப பாவித்துவிட்டு புறந்தள்ளுவதாகவோ அமையக்கூடாது என்று குறிப்பிட்டிருந்தோம்.

ஆனால், தேர்தல் முடிந்த சில மாதங்களிலேயே அந்தப் பேரணி சிதறித் தூள்தூளாகி விட்டது. இதில் மலையக மக்கள் முன்னணி பலிக்கடா ஆகாமல் இருந்ததற்கு எமது தீர்க்கதரிசனமான அரசியல் பார்வையே காரணம் என்றும் இப்போது நாம் நம்புகின்றோம்.

அந்த நேரத்தில் இ.தொ.கா. வின் சேவல் சின்னம் நீதிமன்றத்தில் முடக்கப்பட்டிருந்ததினால் தான் இத்தகைய கூட்டு ஒன்றை ஏற்படுத்தி மயில் சின்னத்தில் போட்டியிடுவதற்கான ஒரு வாய்ப்பை உருவாக்கிக் கொண்டதாக விமர்சனமும் இருக்கின்றது.

இ.தொ.கா.வில் இருந்து விலகி நான் 1989இல் முதன்முதலாகப் போட்டியிட்ட பாராளுமன்றத் தேர்தலே அதாவது 1977ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் அமரர் சௌமியமூர்ததி தொண்டமான் பெற்றதைப் போலவே 10 ஆயிரத்திற்கும் அதிகமான வாக்குகளைப் பெற்றேன்.

அதன் பிறகு நடந்த சகல உள்ளூராட்சி சபை, மாகாண சபை, பாராளுமன்றத் தேர்தல் எல்லா வற்றிலும் எமது சக்தியையும் அங்கத்துவத்தையும் அதிகப் படுத்தியே வந்துள்ளோம். இ.தொ.கா. வில் இருந்து பிரிந்து ம.ம.முயை ஆரம்பித்தது முதல் எம் மக்கள் பலத்தினைத் தேர்தல்களின் மூலம் நிரூபித்துள்ளோம். யாருடைய தயவுமே இல்லாமல் எமது கட்சி சின்னத்திலும், சுயேட்சையாகவும் நின்று அதிகளவு அங்கத்துவத்தை நாம் அதிகரித்துக் கொண்டே வந்துள்ளோம்.

நான் மூன்றுவருட காலமாகச் சிறையில் இருந்தபோது எவ்விதத்திலுமே மக்கள் தொடர்போ, தேர்தல் பிரசார வசதிகளோ இன்றிச் சிறையில் இருந்துகொண்டே தேர்தலில் வெற்றிபெற்றமை இலங்கைத் தேர்தல் வரலாற்றில் ஒரு சரித்திரமாகவே உள்ளது.

2000ம் ஆண்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் நான் 54 ஆயிரம் வாக்குகளையும் தாங்கள் 61 வாக்குகளையும் தனித்தனியாக பெற்றிருந்தோம்.

இறுதியாக நாம் இணைந்து போட்டியிட்டபோது இந்த இரண்டு வாக்குகளும் சேர்ந்து ஒரு இலட்சத்து 20ஆயிரம் அளவிலான வாக்குத் தொகையைப் பெற்றிருந்தது. இதிலே எனது வெற்றிக்கு இ.தொ.கா.தான் காரணம் என்று எப்படி நியாயப்படுத்த முடியும்.

ஆனால், நான் இந்த சர்ச்சையைத் தொடரவிரும்பவில்லை, நடந்தவைகளை மறப்போம்.

இனிவருகின்ற அரசியல் சவால்களுக்கு இணைந்து முகம்கொடுப்பதற்குத் தயாராகுவோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாண அரசாங்க உத்தியோகத்தர் சங்க, யாழ். மாவட்டக் கிளை அங்குரார்ப்பணக் கூட்டம், யாழ். கச்சேரி முன்பாகவுள்ள வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் எதிர்வரும் 9ஆம் திகதி திங்கட்கிழமை பி.ப. 2.00 மணிக்கு இடம்பெறவுள்ளது. (உ)

## மகாபொல கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

உயர்தொழில்நுட்ப நிறுவன மாணவர்களின் கடந்த ஒக்டோபர், நவம்பர் மாதங்களுக்கான மகாபொல கொடுப்பனவுகள் அலுவலகத்தில் வைத்து வழங்கப்படுவதாகவும் எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் இதனைப் பெற்றுக்கொள்ளும் படியும் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (உ-19)

## இரத்தவாடையில் கலந்த தென்றல்

(திருநெல்வேலி)

தமிழீழ விடுதலைப் புலிகளின் கொள்கை முன்னெடுப்புப் பிரிவினரால் தற்போது யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலும் வீதி நாடகங்கள் பரவலாக ஆற்றுகை செய்யப்பட்டு வருகின்றன.

தற்போதைய அரசியல் நிலைவரங்கள், மக்கள் மீது திணிக்கப்படும் வன்முறைகள் மற்றும் சமாதான முயற்சிகள், மக்கள் மத்தியில ஏற்படுத்தியுள்ள மாற்றங்கள் ஆகியவற்றை மையமாக வைத்தே இவ் வீதி நாடகங்கள் பரவலாக ஆற்றுகை செய்யப்பட்டு வருகின்றன.

வலிகாமம் மற்றும் வடமராட்சிப் பகுதிகளில் தற்போதைய அரசியல் சூழ்நிலையை மையமாகக் கொணடு உருவாக்கப்பட்ட 'இரத்த வாடையில் கலந்த தென்றல்' எனும் வீதி நாடகம் மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. (உ-43)


உ
கணபதி துணை
காரைநகர் வாரிவளவு
ஸ்ரீ கற்பகவிநாயகர் தேவஸ்தானம்
மஹா கும்பாபிஷேக தெய்வீகச் சொற்பொழிவு





சொற்பொழிவாளர் தென்னிந்தியா, தஞ்சாவூர் சேக்கிழார் அடிப்பொடி, சைவசித்தாந்த கலாநிதி, இலக்கியகலாநிதி,
நடராஜன் இராமச்சந்திரன்
B.A.,B.L.,D.Lit. (Hon.)

01. 02. 2004 ஞாயிற்றுக்கிழமை காலை சைவ சித்தாந்த வாழ்வியல்

மஹா கும்பாபிஷேகம்
01.02.2004 ஞாயிற்றுக்கிழமை

மஹா கும்பாபிஷேக நிகழ்வில் யாழ்ப்பாணத்து பிரபல தவில், நாதஸ்வர கலைஞர்களின் இசை ஆராதனை இடம்பெறும்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

ஸ்ரீ கற்பகவிநாயகர் தேவஸ்தானம்,
வாரிவளவு,
காரைநகர்.

இங்ஙனம்
தேவஸ்தான நிர்வாகத்தினர்

(சி-7322)

# கௌரவம், கண்ணியத்தை கட்டிக்காத்த முஸ்லிம்களின் அவல நிலைக்கு அமைச்சர் ஹக்கீமே காரணம்

## அடித்துக் கூறுகிறார் இஸதீன் எம்.பி.

(கொழும்பு)

**முஸ்லிம் சமூகத்திற்காக முதலைக்கண்ணீர் வடிக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், வடக்கு-கிழக்கு மாகாண இடைக்கால நிர்வாகசபை குறித்த தனது யோசனைகளை இதுவரையிலும் வெளியிடாதிருப்பதற்கான காரணத்தைக் கூறுமா? என தேசிய ஐக்கிய முன்னணியின் செயலாளர் நாயகமும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.எஸ்.ஷேகு இஸதீன் கேள்வி எழுப்பியுள்ளார்.**

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தினால் நடாத்தப்பட்டு வரும் "விடியும் வேளை" நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்படி கேள்வியை எழுப்பியுள்ளார்.

அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

### இடைக்கால நிர்வாக வரைபு

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையில் வடக்கு-கிழக்கு மாகாணத்திற்கு இடைக்கால நிர்வாகசபை ஒன்றை வழங்க வேண்டும் என்று கோரிவரும் தமிழீழ விடுதலைப்புலிகள், அது தொடப்பான திட்டவரைபு ஒன்றை அரசாங்கத்திடம் சமர்ப்பித்திருந்தமை தெரிந்ததே.

இந்நிலையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சித் தலைவரும் அமைச்சருமான ரவூப்ஹக்கீமும் தானும் ஒரு இடைக்கால நிர்வாகசபை தொடர்பான திட்ட வரைபை தயாரிக்க ஆரம்பித்தார். அவரது இந்தப்பணி இன்னும் முடியவில்லை.

பல சர்வதேச நாடுகளுக்குச் சென்று அங்குள்ள சட்ட வல்லுநர்களின் ஆலோசனைகளை இது விடயமாகப் பெற்றுள்ளதாகவும் விரைவில் தமது திட்டவரைபு பற்றி முஸ்லிம்களுக்கு அறிவிப்பதாகவும் கூறிவரும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சி இதுவரையும் அதனை வெளியிடாதிருப்பதன் மர்மம் என்ன? என்பது தான் புரியவில்லை.

### ஏமாற்று நாடகம்

முஸ்லிம் காங்கிரஸின இத்தகைய செயல் முஸ்லிம் சமூகத்தை ஏமாற்றி அவர்களுக்காக குரல் கொடுப்பது போன்று நாடகம் ஆடுவதாகவே தெரிகிறது.

அதுமட்டுமன்றி, முஸ்லிம் சமூகத்தைத் தமிழீழ விடுதலைப் புலிகள் ஓரங்கட்டுவதற்கும் அமைசசர் ரவூப்ஹக்கீமே பிரதான காரணம்.

கடந்த 2002ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் வே.பிரபாகரனிடம் அமைச்சரும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சித் தலைவருமான ஹக்கீம் சமாப்பித்த அறிக்கையில் வடபகுதியில் இருந்து வெளியேறிய முஸ்லிம்கள் சொந்த விருப்பின் பேரிலேயே வெளியேறியதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

### இனத்தைத் தரம் தாழ்த்தலாமா?

எமது இனத்தை நாம் இவ்வாறு கீழிறக்கிக் கொண்டதனாலேயே இன்று முஸ்லிம் சமூகம் ஓரங்கட்டப்பட்டுள்ளது.

தமிழ்த்தேசிய கூட்டமைப்புக் கூட முஸ்லிம்கள் 1990ஆம் ஆண்டு பலவந்தமாக வெளியேற்றப்பட்டதாகவும் அந்தக் கசப்பான சம்பவங்களுக்கு தாம் மனனிப்புக் கோருவதாகவும் கூறிவருகின்ற நிலையில் ஹக்கீமின் அறிக்கையில் இவ்வாறு கூறிப்பிடப்பட்டிருப்பது எமக்குப் பெரும அவமானத்தையும் அதிருப்தியையும் ஏற்படுத்தி இருக்கின்றது.

எனவே முஸ்லிம் காங்கிரஸ் கடசி இனியாவது இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடாமல முஸ்லிம் மக்களின் உரிமைகளுக்காக குரல்கொடுக்க வேண்டும் அவர்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யவேண்டும். முஸ்லிம்களும ஓர் கண்ணியமான கௌரவமான இனம் என்பதை அனைவருக்கும் எடுத்துக் கூறவேண்டும்.

### ஒன்றுபடவேண்டிய நிர்ப்பந்தம்

அத்துடன், முஸ்லிம்களின் நலனகருதி அவர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியும் எமது கட்சியான தேசிய ஐக்கிய முனனணியும் ஒன்றுபடவேண்டிய நிலை ஏற்பட்டால், நாம் ஒன்றுபட்டு செயற்படத் தயாராக இருக்கின்றோம். ஆனால் நாம் ஒன்றுபடுவதற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எந்த வித நிபந்தனைகளையும் விரிக்கக்கூடாது.

இதேசமயம், ஸ்ரீலங்கா சுதந்தரக்கட்சியும்-ஜே.வி.பியும் கூட்டுச் சேர்திருப்பதனால் சமாதான முயற்சிகளுக்கு மேலும் பாதிப்பு ஏற்படலாம் என கூறப்பட்டு வருகின்றது. இதனை நான் முற்றாக நிராகரிக்கின்றேன்.

### இனப்பிரச்சினைக்கு தீர்வு

ஜே.வி.பியினர் இனவாதிகள் என்றும் விமர்சிக்கப்படுகின்றது. அவ்வாறு ஜே.வி.பி. ஓர் இனவாதக் கட்சியாக இருநதால் இன்று இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண அக் கட்சி முன்வந்திருக்காது.

அதுமட்டுமன்றி, தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேசி தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும் என அவர்கள் கூறியிருக்கவும் மாட்டார்கள்.

இவைதவிர எமது கட்சியின் தலைவி திருமதி பேரியல் அஸ்ரப் ஜேவிபியுடன் இணைந்து செயற்படுவதாகவும், ஜே.வி.பி.-ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் கூட்டிணைவை வரவேற்பதுடன் கூட்டமைப்பின் கூட்டங்களிலும் கலந்து கொள்வதாகவும் கூறி விமர்சிக்கப்பட்டு வருகின்றன.

நாங்கள் எமது இன மக்களை விற்பதற்காக ஜேவிபியுடன் இணைநது செயற்படவில்லை சமாதான வழிக்கு ஜே.வி.பியையும் கொண்டுவந்து சகல இன மக்களுக்கும் சமவுரிமையுடன் கூடிய நியாயமான தீர்வை பெற்றுக் கொடுப்பதற்காகவே அவ்வாறு செயற்படுகின்றோம் என்றார். (உ-60,10)

### சம்பள உயர்வு

(வடலியடைப்பு)

கூட்டுறவு ஆணைக்குழுவின் சுற்று நிருபத்துக்கமைய பணிப்பாளர் சபையின் சிபார்சுடன் சங்கானை ப.நோ.கூட்டுறவுச் சங்க ஊழியர்களுக்கு 31/99ஆம் இலக்க சம்பளத்திட்டத்தின்படி ஜனவரிமாதம் முதல் 1250 ரூபா சம்பளஉயர்வு வழங்கப்படவுள்ளதாகவும் பொது முகாமையாளர் க.இராசதுரை அறிவித்துள்ளார். (உ-21)



யாழ்.ஸ்ரான்லி வீதியில், அப்பலோ மருத்துவமனையின் தகவல் நிலையம் நேற்று திறந்துவைக்கப்பட்டது. யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் நிலையத்தை நாடாவெட்டித் திறந்து வைப்பதையும் பணிப்பாளர் நவரட்ணம் அருகில் நிற்பதையும் படத்தில் காணலாம். அவரை அழைத்து வருவதையும் படத்தில் காணலாம்.

# இலங்கையின் சுதந்திரதினத்தன்று குடாநாட்டில் கடையடைப்பு

## வெகுஜன அமைப்புக்கள் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழர்களை இன ரீதியாக ஒழிப்பதற்கு 1956இல் தனிச்சிங்களச் சட்டம் பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டது. அந்த நாள் தொடக்கம் இலங்கையில் சுதந்திரதினத்தைத் துக்க தினமாகத் தமிழர்கள் கடைப்பிடிக்கின்றனர். சிங்கள ஆட்சியாளர்களின் பிடியில் இருந்து விடுவிக்கப்படும் போது நான் தமிழர்களுக்கு உண்மையாள சுதந்திரம் கிடைக்கும் என்பது தெளிவாகத் தெரிகின்றது. எனவே, எதிர்வரும் சுதந்திர தினத்தைத் தமிழ்மக்கள் பகிஷ்கரிக்க வேண்டும்.

யாழ்ப்பாண மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் இவ்வாறு கோரிக்கைவிடுத்துள்ளது.

ஒன்றியம் இதுபற்றி விடுத்துள்ள அறிக்கையில்,

யாழ். மாவட்டத்தில் உள்ள அனைததுப் பொது நிறுவனங்கள், அரச அரசசார்பற்ற நிறுவனங்கள், தனியார் கல்வி நிறுவனங்கள், கூட்டுறவு நிறுவனங்கள், கல்விக் கூடங்கள், பாடசாலைகள், தனியார் வர்த்தக நிறுவனங்கள் ஆகிய அனைத்தும் எதிர்வரும் சுதந்திர தினமான 4ஆம் திகதியன்று தமது கடமைகளை இடைநிறுத்திச் சுதந்திர நாட்கொண்டாட்டங்களைப் பகிஷ்கரிக்க வேண்டும்.

அதேவேளை, அன்றைய தினம சிற்றூர்திகள், பேருந்துகள் அனைதும் தங்களது வழமையான சேவைகளை இடைநிறுத்திப் பகிஷ் கரிக்குமாறும் வேண்டுகிறோம்.

இலங்கை சுதந்திரம் பெற்ற நாள் தொட்டு இன்றுவரை சிங்களப் பேரினவாதிகளாலும், சிங்கள ஆட்சியாளர்களாலும் தமிழ்மக்கள் நசுக்கப்பட்டு, உரிமைகள் பறிக்கப்பட்டு, தமிழ்மண் ஆக்கிரமிக்கப்பட்டு சொல்லொணாத் துன்பங்களை தமிழ்மக்கள் அனுபவித்து வருகின்றார்கள்.

தமிழ் பேசும் மக்கள் தங்களது வாழ்வுரிமைகளைப் பெற அதிக இரத்தம் சிந்தியுள்ளார்கள். அதிக உயிர்த் தியாகம் செய்திருக்கிறார்கள். குறிப்பாகத் தமிழ்மக்கள் தங்கள் விடுதலைக்காக அதிக விலை கொடுத்திருக்கிறார்கள் என்றே கூறவேண்டும்.

தமிழ்மக்களின் விடுதலைக்காக உயிர்த்தியாகம் செய்த உத்தமர்களை எண்ணிப்பாருங்கள். இரத்தம் சிந்திய வரலாற்றை எண்ணிப்பாருங்கள்! சிங்கள ஆட்சியாளர்களின் கொடூரம் மனக்கண் முன் குமுறிவரும்.

தங்களது நாளாந்த பொது வேலைகளைக் கைவிட்டு வீட்டில் முடங்கி சுதந்திரநாட் கொண்டாட்டங்களைப் பகிஷ்கரிக்குமாறு வேண்டுகிறோம்.

கடந்த இரண்டு வருடமாக நடைமுறையில் உள்ள போர் நிறுத்த காலத்தில் சிங்கள ஆட்சியாளர்கள் இனப்பிரச்சினையைத் தீர்க்காமல் பின்னடித்து வருகின்றார்கள். இதனைத் தமிழ்மக்கள் கவலையுடன் எதிர்நோக்குகிறார்கள். இது பற்றி ஆட்சியாளர்கள் நன்கு சிந்திக்கவேண்டும். இந்தச் சூழ்நிலையில் சுதந்திரதினம் வருகின்றது. எமது உணர்வலைகளை இலங்கைக்கும் உலகிற்கும் தெரியப்படுத்துவோம். இலங்கையில் சுதந்திரம் தமிழ்மக்களுக்குக் கிடைக்கவில்லை என்பதனை உலகிற்கு உணர்ததவே அன்றைய தினத்தை தமிழ்மக்கள் புறக்கணிக்கவேண்டும் எனக் கேட்டுக் கொண்டுள்ளது. (உ)




வசாவிளானைச் சேர்ந்த பட்டதாரி இளைஞரான தவநாதன் றொபேட் மதிசேகரனின் முயற்சியில் உருவான சலவைத்தூள் அறிமுக நிகழ்வு நேற்று யாழ்.வணிகர் கழகத்தில் இடம்பெற்ற போது பிடிக்கப்பட்ட படம். (படங்கள்:சாந்தன்)

வினைபகை என்றிரண்டின் எச்சம்
நினையுங்கால்
தீயெச்சம் போலத் தெறும்.
-குறள்

# வலம்புரி

## வெந்த புண்ணில் வேல் பாய்ச்சாதீர்!

வடக்குக் கிழக்கில் கடந்த இருபது வருட கால யுத்தம் மக்களின் இயல்பு வாழ்க்கையில் பெரும் பாதிப்பை ஏற்படுத்திவிட்டது. குறிப்பாக, யாழ். குடாநாட்டில் நடந்த யுத்தம், இடப்பெயர்வு, சொத்தழிவு, உயிர்ச்சேதம் என்ற வகையில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. இந்நிலைமை இன்று வரை நிவர்த்தி செய்யப்படவில்லை.

இடம்பெயர்ந்த மக்களை மீளக் குடியமர்த்தல், வீடமைப்பு, புனர்வாழ்வு, புனரமைப்பு என்ற வகையில் எந்தப் பணியுமே உருப்படியாக மேற்கொள்ளப்படவில்லை.

பாடசாலைகள் இராணுவத்தின் ஆக்கிரமிப்பிற்குள் இருந்து இன்னமும் விடுபடாதுள்ளது. இதனால் மாணவர்களின் கல்வி பாதிப்படைந்துள்ளது. இதன் விளைவை யாழ் மாவட்டத்தின் கடந்தகாலக் கல்விப் பெறுபேறுகள் பறைசாற்றியுள்ளன.

இவற்றின் மத்தியிலும் யாழ். மாவட்டத்தின் அன்றாட வாழ்வுப் பணிகள் நடைபெறுகின்றனவெனில் அதற்குக் காரணம் யாழ்ப்பாணம் மண்ணில் இருந்து கடமை புரிபவர்களின் தன்னலம் அற்ற சேவை என்பதை எவருமே மறக்க முடியாது.

குறிப்பாக யாழ்.போதனா வைத்தியசாலை உட்பட பிராந்திய சுகாதார சேவைகளின் நிர்வாகத்திற்குட்பட்ட வைத்திய நிலையங்கள், உள்ளூராட்சி சபைக்குட்பட்ட ஆயுர்வேத வைத்தியசாலைகள் என்பன அடிப்படை வசதிகள் இன்றியும் பணியாளர்களின் தன்னலம் அற்ற சேவையால் இயங்குகின்றன. இதனால், மக்கள் தங்கள் தேவைகளை ஓரளவேனும் நிவர்த்தி செய்துகொள்கின்றனர். இந்நிலைமை வைத்தியசாலைகளுக்கு மட்டுமே உரியதன்று.

பாடசாலைகள், அரச திணைக்களங்கள், உயர்கல்வி நிறுவனங்கள், அரச கூட்டுத் தாபனங்கள் என யாழ். மாவட்டத்தில் இயங்கும் அனைத்து அமைப்புகளுக்கும் பொருத்தமானதாகும்.

தென்னிலங்கையின் கரங்களை அண்ணாந்து பார்ப்பதன் மூலம் எமது தேவைகள் நிறைவாகப் போவதில்லை. எம்மை நாமே நிர்வகிக்கும் அளவிற்கு யாழ். மாவட்டத்தின் நிர்வாகச் செயற்பாடுகள் உயர்வுபெற வேண்டும்.

அல்லலுறும் தமிழ் மக்களைத் தேடிச் சென்று அவர்களுக்கு உதவி செய்யும் பக்குவநிலை உருவாகவும், உருவாக்கவும் வேண்டும். பாடசாலைகளில் மெல்லக் கற்கும் மாணவர்கள் மீது ஆசிரியர்கள் தங்கள் கருணைப் பார்வையைச் செலுத்த வேண்டும். வீதிகளில், பஸ் நிலையங்களில் யாசிக்கும் சிறுவர்கள், முதியவர்கள், பெண்கள் மீது சமூக சேவைப் பிரிவினர் தங்களின் அருட்பார்வையைச் செலுத்தி அவர்களின் எதிர்கால வாழ்வுக்கு உதவ வேண்டும்.

இருக்க இடமின்றி, உடுக்க உடையின்றி, உண்ண உணவுமின்றி ஓலைக்குடிசைக்குள் உறங்குவோருக்கு வெளிநாட்டில் இருந்துவரும் யாழ்ப்பாணத்து மண்ணின் உறவுகள் உதவுவது அவசியமாகும்.

இவையாவும் நடைபெறுகின்ற அதேநேரம், யாழ்ப்பாணத்தில் நடைபெறுகின்ற பணிகளைத் தடைசெய்கின்ற வகையிலான வேலைநிறுத்தங்கள், அலுவலகங்கள் முன்பான மறியல் போராட்டங்கள் என்பனவும் தவிர்க்கப்பட வேண்டும்.

முக்கியமாக சுகாதார சேவையாளர்கள், பல்கலைக்கழக ஊழியர்களின் வேலை நிறுத்தங்களால் மனித சமூகம் பெரும் பாதிப்பை அனுபவிக்கின்றது. அதாவது சுகாதார ஊழியர்களின் வேலை நிறுத்தத்தால் நேரடியாகவும், பல்கலைக்கழக ஊழியர்களின் வேலை நிறுத்தத்தால் மறைமுகமாகவும் மனித சமூகம் பாதிப்பை அனுபவித்துக் கொள்கிறது.

எனவே தென்னிலங்கையின் நிலைபரத்தோடு ஒப்பிட்டு, யுத்தத்தால் பாதிப்படைந்த யாழ்ப்பாணத்திலும் ஒரே மாதிரியாக ஆர்ப்பாட்டங்களை, வேலை நிறுத்தங்களை நடத்துவது பாதிக்கப்பட்ட மக்களுக்கு மேலும் வேதனையைக் கொடுப்பதாகவே இருக்கும்.

## ஸ்ரீ.சு.க. - ஜே.வி.பி. கூட்டணி
# ஜனநாயகத்துக்கு கிடைத்த வெற்றி
### ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பெருமிதம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும், மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையில் அமைக்கப்பட்ட கூட்டு, ஜனநாயகத்துக்குக் கிடைத்த வெற்றி என்றே என்னால் கருத முடிகிறது என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கருத்து வெளியிட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முதலாவது கூட்டம் தொடர்பாக ஜனாதிபதி விடுத்துள்ள அறிக்கையில் இவ்வாறு அவர் கருத்து வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது, இவ்விரு கட்சிகளும் மாறுபட்ட கொள்கைகளையும், போக்குகளையும் கொண்டிருந்தாலும் கூட இக் கூட்டமைப்பின் மூலம் நாட்டின் விடிவுக்கு வழிகோலியுள்ளது.

இடதுசாரிக் கட்சிகளுக்கும் இக் கூட்டமைப்பு ஓர் எடுத்துக் காட்டாக விளங்குகிறது.

நாட்டு மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்வதற்கு அனைத்து இனமக்களும் இக் கூட்டமைப்புக்கு ஆதரவு வழங்கவேண்டும்.

இனப் பிரச்சினை உட்பட பல முக்கிய விடயங்கள் குறித்து இவ்விருகட்சிகளுக்கும் இடையே இணக்கம் ஏற்பட்டுள்ளது.

நாட்டில் இன்னல்கள் ஏற்பட்ட காலத்திலெல்லாம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இடதுசாரிக்கட்சிகளுடன் இணைந்து செயற்பட்டதை ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டின் நன்மைக்காக கடந்த 1956, 1964,1968, 1994 ஆம் ஆண்டுகளில் இத்தகைய கூட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டன.

இடதுசாரிக் கட்சிகளுக்கும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையிலான கூட்டினை சில கட்சிகள் சிதைக்க முற்பட்டுவருகின்றன.

இடதுசாரிக் கட்சிகளின் அனுசரணையுடன் இதுவரை நடைபெற்ற சகல தேர்தல்களிலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வெற்றிபெற்றுள்ளது எனவும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (தி-61)

## ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்க ஆண்டுவிழா

(யாழ்ப்பாணம்)

ஊனமுற்றோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் ஆண்டு விழாவும், மாற்று வலுவுடையவர்களுக்கான போட்டிகளும் பரிசளிப்புவிழாவும் எதிர்வரும் 4ஆம் திகதி புதன்கிழமை காலை 7.30 மணிக்கு சங்கக் கட்டடத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். கனகரத்தினம் மகாவித்தியாலய ஆசிரியை திருமதி ஆ.இரவீந்திரனும் சிறப்புவிருந்தினர்களாக ஐ.நா. சிறுவர் நிதிய யாழ். அலுவலகப் பொறுப்பதிகாரி ஏ.ஸ்ரீஸ்கந்தராஜா, ஐ.நா. அபிவிருத்திச் செயற்றிட்ட சிரேஷ்ட திட்ட அலுவலர் திருமதி ஞானசிவபாத சுந்தரம் ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (உ)

## பற்சுகாதாரம் பேண நடவடிக்கை

(குப்பிளான்)

அனலைதீவு மாணவர்களுக்கு இலவசமாக பற்பசை, பற்தூரிகைகள் என்பன வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அனலைதீவில் உள்ள 3 பாடசாலைகள் மற்றும் 4 முன்பள்ளிகளின் 265 மாணவர்களை பரிசோதனைக்கு உட்படுத்தியபோது அவர்களில் 232 பேருக்கு பல் தொடர்பான நோய்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இதனையடுத்து சிறுவயதில் இருந்தே மாணவர்களின் பல் தொடர்பான நோய்களைக் கட்டுப்படுத்தும் முகமாக பற்பசை, பற்தூரிகைகள் என்பனவற்றை இலவசமாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கனடா வாழ் அனலைதீவு மக்கள் ஒன்றியமும், அனலைதீவு வர்த்தகர்களும் மேற்படி பொருட்களை வழங்குவதற்கு நிதி வழங்க முனவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-20)

## திலங்க சுமதிபாலவின் மீளாய்வு மனு நிராகரிப்பு

(கொழும்பு)

இலங்கை கிரிக்கெற் சபையின் தலைவர் திலங்க சுமதிபால, தனக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கை இரத்துச் செய்யக் கோரி தாக்கல் செய்த மீளாய்வு மனுவை மேல் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

கடந்த டிசம்பர் மாதம் 8ஆம் திகதி தாக்கல் செய்யப்பட்ட தனக்கு எதிரான வழக்கிலிருந்து விடுதலை செய்யப்பட்டபோதும், மீண்டும் சட்டவிசாரணைகளை நடத்துவது சட்டவிரோதமானது என மேல் நீதிமன்றம் தீர்பளிக்க வேண்டும் எனக்கோரி கொழும்பு மேல்நீதிமன்றத்தில் திலங்க சுமதிபாலவினால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இம் மீளாய்வு மனுவை விசாரணை செய்த கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி எரிக் தசநாயக்க, சுமதிபாலவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு சட்டபூர்வமாக அமைந்துள்ளது என்பதைச் சுட்டிக்காட்டியே இம் மனுவை நிராகரித்துள்ளார். (உ-4)

### ஓம் தினசரி தியானம்

#### விவேகச் சிந்தனைகள்

நீ வரம்பில்லா வலிமை பெற்றவன். உன்னுடைய உண்மை இயல்போடு ஒப்பிடும் போது காலமும் இடமும் கூட ஒரு பொருட்டல்ல.

நீ எதையும் எல்லாவற்றையும் சாதிக்கக் கூடியவன். எல்லாம் வல்லவன் நீ.

**சுவாமி விவேகானந்தர்**

## ஐ.ஐ.எஸ்.இன் நிறுவன தினம்

(யாழ்ப்பாணம்)

யாழ். ஐ.ஐ.எஸ். நிறுவனத்தின் 8ஆவது நிறுவன தினமும் சான்றிதழ் வழங்கும் வைபவமும் எதிர்வரும் 5ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரியின் ஜூபிலி மண்டபத்தில் நிறுவன இயக்குநர் கெ.விக்னேஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் கௌரவ விருந்தினர்களாக இன்போரெல் லங்கா லிமிட்டெட்டின் நிறைவேற்றுப் பணிப்பாளர் டேவிட் டொமினிக், இலங்கை - மாலைதீவு எக்ஸல் இன்ரநஷனல் பிராந்திய முகாமையாளர் பிரசாந்த பெர்ணான்டோ ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

அத்துடன், பரீட்சைகளில் சிறப்பாகச் சித்தியெய்திய க.சித்ரூபினி, கி.கௌரி, கெ.கயல்விழி, செ.வசந்தி, செ.பத்தகௌரி, ப.கோசலை, ந.தர்மராஜா, த.பகீரதன், சி.பிரதீபன் ஆகியோருக்குச் சிறப்பு விருதுகள் வழங்கப்படவுள்ளன.

தவிர, த.சிந்துயாவுக்குத் தங்கப்பதக்கமும், த.சுதர்சமோகனுக்கு கணனி மென்பொருள் விற்பன்னர் விருதும் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளது. (உ)

## சுவாமி விவேகானந்தர் எழுச்சி வார சமயத்திறன்சார் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

சுவாமி விவேகானந்தர் ஜெயந்தி தின எழுச்சி வாரத்தையொட்டி சுவாமி விவேகானந்தர் நற்பணி மன்றத்தினால் பாடசாலை மாணவர்களிடையே நடாத்தப்பட்ட சமயத்திறன் சார் கட்டுரை, கவிதை, பேச்சுப்போட்டிகளின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

முதல் மூன்று இடங்களையும் பெற்றவர்களின் விபரம்

**கீழ்ப்பிரிவு (கட்டுரை )**

1ஆம் இடம்: க.யஸ்மிலா - யாழ் / வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை.

2ஆம் இடம்: சி.தவசீலன் - சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

3ஆம் இடம்: ச.சக்திதாயினி, உ.சிவகுருநாதன்.

**கவிதை**

சி.தவசீலன்

**பேச்சு**

1ஆம் இடம்: சி.காயத்திரி - வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை.

2ஆம் இடம்: க.உசாந்தன் யாழ். இந்துக் கல்லூரி

3ஆம் இடம்: பி.சகானா - தேவரையாளி இந்துக் கல்லூரி.

**மத்திய பிரிவு (கட்டுரை)**

1ஆம் இடம்: ந.நவராஜகுமாரன் - யா/ இந்துக் கல்லூரி.

2ஆம் இடம்: சி.வல்லவக்குமரன் - கொக்குவில் இந்துக் கல்லூரி.

3ஆம் இடம்: அ.கிரிசாந், ஆ.அர்ச்சனா - வேம்படி மகளிர் உயர் தரப்பாடசாலை.

**கவிதை**

1ஆம் இடம்: மா.இராஜலக்சுமி.

2ஆம் இடம்: ந.ஜெயதாசன் - வேலணை சைவப்பிரகாச வித்தியாலயம்.

3ஆம் இடம்: சி.வல்லவக்குமரன் - கொக்குவில் இந்துக் கல்லூரி.

**பேச்சு**

1ஆம் இடம்: ந.நவராஜகுமரன் யா/ இந்துக் கல்லூரி.

2ஆம் இடம்: இ.சஸ்மிரா- யாழ் / வேம்படி உயர்தரப் பாடசாலை, யோ.சுதாகரன்.

3ஆம் இடம்: மா.ராஜலட்சுமி

**மேற்பிரிவு (கட்டுரை)**

1ஆம் இடம்: சி.சிவரூபன் - ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

2ஆம் இடம்: சு.பவித்ரா.

3ஆம் இடம்: இ.சுபாஜினி- வசாவிளான் ம.மகாவித்தி.

**கவிதை**

1ஆம் இடம்: யூ.அன்ரன் றஞ்சித்குமார் - வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி.

2ஆம் இடம்: இ.சுபாஜினி.

3ஆம் இடம்: ஞா.போல் அன்ரன் - இணுவில் இந்துக் கல்லூரி.

**பேச்சு**

1ஆம் இடம்: ஞா.போல் அன்ரன்.

2ஆம் இடம்: அ.ஜோசெப் அனுசன்- நெடுத்தீவு மகாவித்தி.

3ஆம் இடம்: இ.சுபாஜினி.

இவர்களுக்கான பரிசில்கள் இன்றையதினம் இடம்பெறவுள்ள சுவாமி விவேகானந்தர் ஜயந்தி தின ஆன்மீக எழுச்சி விழாவில் வைத்து வழங்கப்படவுள்ளன. (உ)

# நடுக்குடத்தனை பகுதி மீனவர்கள் கடலுக்குச் செல்ல மார்க்கமில்லை

(திருநெல்வேலி)

நடுக்குடத்தனைப் பகுதி மீனவர்கள தொழிலுக்குச் செல்வதற்காகப் பயன்படுத்தும் தரைவழிப் பாதையை கடந்த ஒரு வாரகாலமாகப் படையினர் தடைசெய்து வருவதனால் அப்பகுதி மீனவர்கள் தொழிலில் பெரும் இடையூறுகளை எதிர்நோக்கி வருவதாகத் தெரிய வருகிறது.

கடந்த காலத்தில் இடம்பெற்ற யுத்த நடவடிக்கையின் போது நடுக்குடத்தனைப் பகுதியைக் கைப்பற்றிய படையினர், புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் இப்பகுதியூடாக மீனவர் பயணிக்கலாம் என அறிவித்திருந்தனர்.

எனினும் இப்பகுதியை பயன்படுத்தும் மீனவர்கள் மீது பலத்த சோதனைக் கெடுபிடிகளை நடத்தி வந்த படையினர், அண்மையில் இப்பகுதியில் காவலரண் ஒன்றை அமைத்ததுடன் ஒரு வாரகாலமாக இப்பகுதியூடாக மீனவர்கள் செல்வதறகும் தடைவிதித்து வருகின்றனர்.

இதனால், இவ் வழியைப் பயன்படுத்தும் 300ற்கும் அதிகமான நடுக்குடத்தனைப் பகுதி மீனவர்கள், பொற்பதிப் பகுதியூடாகவே தமது தொழிலுக்காகச் செல்ல வேண்டியுள்ளதால், தொழிலை மேற்கொள்வதில் உள்ள இடைஞ்சல் காரணமாக இப்பகுதி மீனவர்களுடன முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் நடுக்குடத்தனை மீனவர்கள் தொழிலுக்குச் செல்லும் மார்க்கமின்றிக் கலங்குவதாகத் தெரிய வருகிறது. (உ-43)

## இலங்கை...

தெரிவித்துள்ளன.

இதே வேளை தென்னிலங்கை அரசியல் முரண்பாட்டை, இந்தியப் பாதுகாப்பு ஒப்பந்தம் மேலும் அதிகரிக்கச் செய்யும். இந்நிலையில் உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதை இந்தியா பிற்போட வேண்டும் என்று தாம் கோரியதாக ஐ.தே.க.பிரமுகர் ஒருவர் தெரிவித்துள்ளார். (இ)

## காரைநகர்...

கள் நடைபெறவுள்ளன.

இதேவேளை இவ் ஆலய கும்பாபிஷேகத்தை முன்னிட்டு பக்தர்களின போக்குவரத்து வசதியை கருத்தில் கொண்டு இன்று அதிகாலை முதல் மாலை வரை விஷேட போக்குவரத்து சேவைக்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ம)

## முப்படை மீதான...

இது இவ்வாறு இருக்க முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் ஆட்சியில், லலித் அத்துலத்முதலியால் வகிக்கப்பட்டது போன்று தேசிய பாதுகாப்பு அமைச்சை ஐ.தே.முன்னணிக்கு வழங்க ஜனாதிபதி முன்வந்தார் என்றும் அதனை ஐ.தே.முன்னணி புறக்கணித்து விட்டதென்றும் ஜனாதிபதிக்கு நெருக்கமான வட்டாரங்கள் கூறுகின்றன.

## அமைச்சர்...

சந்திரன், சர்வதேச தமிழீழ மாணவர் பேரவைத் தலைவர் எஸ்கஜேந்திரன், யாழ்மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவர் எஸ்சக்திவேல், விரிவுரையாளர் சிதம்பரநாதன் மற்றும் முஸ்லிம் பிரதிநிதிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

சமாதான முயற்சிகளை முன்னெடுப்பது குறித்து யாழ். சமூகத்தின் கருத்துக்களை அறிந்து கொள்ளும் வகையில் இக் கலந்துரையாடல் இடம்பெற்றது. இக் கலந்துரையாடல் இன்றும் தொடர்ந்து நடைபெறும். (இ)

## தலைவர் பிரபா...

பொலிஸாருக்கு இல்லை.

கடந்த யுத்தகாலத்தில் பொலிஸாரின் செயற்பாடுகளால் பொது மக்கள் பலர் அசௌகரியங்களை எதிர்நோக்கியிருந்தார்கள். குறிப்பாக வீதித் தடைகள், சோதனைச் சாவடிகள், சுற்றி வளைப்புத் தேடுதல்கள் ஆகியவற்றால் மக்கள் துன்புறுத்தல்களுக்குள்ளாகி இருக்கிறார்கள். இதனால் பொலிஸார் மீது மக்கள் வெறுப்படைந்துள்ளார்கள்.

எனவே தற்போதைய அமைதிச் சூழலைப் பயன்படுத்தி மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்கப் பொலிஸார் முயற்சிக்க வேண்டும் என்று அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (உ-60,10)

## எமது பலத்தை...

பெற்ற இக் கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில்,

கல்முனை மாநகரசபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போட்டியிடுவது தமிழ் மக்களையோ, மாற்று அரசியல் கட்சிகளையோ எதிர்ப்பதற்காக அல்ல. இதனை தமிழ் மக்களும், மாற்று அரசியல் கட்சிகளும் நன்கு விளங்கிக் கொள்ள வேண்டும்.

இந் நாட்டில் வாழுகின்ற முஸ்லிம் மக்களின் ஆதரவும், பலமும் முஸ்லிம் காங்கிரசுக்கு எந்தளவுக்கு உள்ளது என்பதை சர்வதேச சமூகம் புரிந்து கொள்ள வேண்டும்.

இந் நிலையில் பெரும்பான்மை இனக் கட்சிகளின் அரசியல் நடவக்கைகளை முஸ்லிம் காங்கிரஸ் எந்தளவிற்கு ஏற்றுக் கொள்கிறது என்பதையும் எடுத்துக் காட்டுவதாக அமையும் என்றும் அமைச்சர் ரவூப் ஹக்கீம் கூறினார்.

இக் கூட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தவிசாளர் பஸீர் சேவுதாவூத், பாராளுமன்ற உறுப்பினர் எச்.ம்.எம்.ஹாரிக் ஆகியோரும் கலந்து கொண்டு உரையாற்றினர். (ம)


## மனமது திருத்தி ஓத அருளாயோ?

முனமுனை நினைத்துப் பு,சை முறைமுறை யியற்று வோர்த
முளமுள நடக்கு மாறு - அருள்கோனே
முனியவர் துரத்தக் காக வடிவது மறைத்து ஓடு
நதியது பெருக்கு ஞான - இறையோனே
அனைவரு மதித்து வாழ மடியிணை துதிக்கு ஞான
மதனினை யெனக்கு வாரி - பொழியாயோ?
அடியினை இருத்தி ஓது கவிபல வடித்து மானத்
தமிழினி லளிக்கு மாறு - தருவாயே
மனமதை யுருக்கி யோக அநுபுதி யளிப்ப தான
தமிழ்மறை யழிக்க நாளு - முயன்றேதான்
மனவிருள் மிகுத்து ஆடு மறையவ ருளத்தை நாடி
மனமது திருத்தி ஓத - அருளாயோ
கனதன மிகுத்த காரை நகரது ஜொலிக்க வாரி
வளவது கொழிக்க மேவு முமை பாலா
கடிபத நினைத்து வாழ மடியவர் நிலைத்து வாழ
கனவரு ளளிக்கு மானை - முகவோனே.

- நாயன் மார்க்கட்டு இராசையா குகதாசன்

வாரிவளவு கும்பாபிஷேக நிகழ்வையொட்டிய பாமாலை

## VACANCIES
## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

University of Jaffna will entertain applications from suitably qualified persons upto 17.02.2004 for the post of Assistant Lecturer (on contract) in Media studies.

SALARY : Rs. 10,800/= per month (fixed)

- Preference will be given to those who have experience in editing a Tamil news paper or work experience in a Media for a considerable period of time.
- Desirable to those who have a good knowledge of Tamil/English Language and communicative skills and knowledge of Information and Communication Technology.

Application forms and other details may be obtained from the office of the Assistant Registrar / Establishments, University of Jaffna, Sri Lanka, either in person or by sending a money order for Rs. 20/= per form. Those who wish to obtain application forms by post are requested to send a Money order/ Postal order drawn in favour of the "Bursar, University of Jaffna" together with a self – addressed stamped envelop 23 x 30 cm In size.

Applicants from the University System / Government Departments / Corporations and Statutory Boards should channel their applications through the Head of respective Institutions.

Applications received after the closing date will be rejected without intimation.

Registrar,
University of Jaffna,
Sri Lanka.
2004.01.30. (C/7337)

## PILLIAR INN GARDEN RESTAURANT

பிள்ளையார் இன் காடின் றெஸ்றோறன்ட் உங்களை அன்புடன் வரவேற்கின்றது. இது ஒவ்வொரு நாளும் காலை 7 மணிமுதல் இரவு 12 மணி வரையும் திறந்திருக்கும். நீங்கள் விரும்பிய காலை, மதிய, இரவு சாப்பாடுகள், சிற்றுண்டிகள் வெளியில் கொண்டு செல்லப் பார்சல்கள் செய்து கொடுக்கப்படும். மக்களின் தேவை குறித்துச் சேவை செய்ய வந்துள்ளோம். மேலைத்தேய கீழைத்தேய சமையல் வல்லுநரால் சகல சாப்பாடுகளும் நாவுக்கு ருசியாக செய்து வழங்கப்படும். உங்கள் ஓடர்களை முன்கூட்டியே பதிவு செய்யவும்.

குளிர்மையான பியர் கொக்ரெயில்ஸ் திறந்த வெளியில் ரம்மியமான சூழலில் வழங்கப்படும் *(Chilled Beer & Cock - tails)* எங்களிடம் குடும்ப அறைகள் (குளிரூட்டப்பட்டவை) *(Family Suite)* இணைந்த அமெரிக்கன் குளியல் அறைகளுடன், விசாலமான வாகனத் தரிப்பிடமும் குளிரூட்டப்பட்ட வாகனங்களும் உண்டு அத்துடன் உங்கள் விமானச் சீட்டுக்களையும் *Lion Air* (லயன் எயர்), *Expo Aviation* (எக்ஸ்போ ஏவியேசன்) முதலானவற்றிற்கும் பெற்றுக்கொள்ளலாம். சகல சேவைகளுக்கும் நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்:

**பிள்ளையார் இன் (*Stores*)**
**31. மானிப்பாய் வீதி.**
**யாழ்ப்பாணம்.**

*T.P. - 021 222 2829*
*T.P. - 021 222 5595*
*Fax - 021 222 5595*
*E-mail - Piyarinn@sltnet.lk*
*Website - WWW.Pillaiyarinn.com*

[C/7336]

## இலங்கை வங்கி
## அறிவித்தல்

வங்கி விடுமுறை தினங்களாகிய 2004 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 2ம், 4ம், 5ம் திகதிகளில் இலங்கை வங்கியின் சகல கிளைகளும் வங்கிஅலுவல்களுக்கு மூடப்பட்டிருக்கும் என்பதனை வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

உதவிப் பொதுமுகாமையாளர் அலுவலகம்
இலங்கை வங்கி
யாழ்ப்பாணம்.
30.01.2004

உதவிப் பொதுமுகாமையாளர்
(வடபிராந்தியம்)

(C/7333)

## பாராட்டி வாழ்த்துகிறோம்



காரைநகர் திக்கரை களபூமியை பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்டவரும் எஸ். வி. எம். நிறுவன முகாமையாளரும் காரைநகர் இந்துக் கல்லூரி பழைய மாணவனும், புனித ஜோன் பொஸ்கோ பாடசாலை, யாழ். இந்துக் கல்லூரி ஆகியவற்றின் பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களின் உறுப்பினரும், யாழ் வர்த்தக சங்க உறுப்பினரும், திருமால் அடியவரும், பக்தனுமான

### தம்பையா தியாகலிங்கம்

அவர்கள் அகில இலங்கை சமாதான நீதிவானாக யாழ்.மாவட்ட மேலதிக நீதிபதி திருமதி எஸ்.நந்த சேகரன் முன்னிலையில் 27. 01. 2004 அன்று சத்தியப் பிரமாணம் செய்து கொண்டமையையிட்டு அவரை மனமுவந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

இவர் பல்லாண்டு காலம் வாழ்ந்து தனது சமாதான நீதிவான் பணியைத் தொடர திருவெங்கடேஸ்வரன் அருள் பாலிக்க வேண்டி பிரார்த்திக்கின்றோம்

குபேரன் களஞ்சியம்,
இல. 160, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

குபேரன் களஞ்சிய
ஊழியர்கள்

(C/7338)

## 14-ம் வருட நினைவஞ்சலி



வருகை
16
-
04
-
1934

பிரிவு
01
-
02
-
1990

காரைநகர் வாரிவளவு

### டாக்டர் S.S.இளையதம்பி

தந்தது என் தன்னை கொண்டது என் தன்னை
சங்கரா யார்கலோ சதுரர்.

வாரிவளவு,
காரைநகர்

நினைவுகளோடு
பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(C/7341)


இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.02.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.